2551

TEXT BOOK

OF

TAMIL SHORTHAND

2100

SUBRAMANIAM

3/8

TAMIL SHORTHAND

A NEW AND COMPLETE SYSTEM

OFFICE OF THE
30 MAR 1938
MADRAS

DEVISED BY

N. SUBRAMANIAM,

Council Reporter, Corporation of Madras.

THE TEXT

Containing full instruction in the art
with lessons & exercises.

Published by

T. NARAYANASWAMI,

Thyagaroyanagar, Madras.

2100
653

V. R. Press, Madras.

CONTENTS

	PAGE
FOREWORD	i
INTRODUCTION	ix
EXPERT OPINIONS	xv
FIRST LESSON	1
Circles representing the vowels அ,ஆ;ஒ & ஓ. Straight forward strokes representing the consonants த், ய், ல், ர், ற், ள் & வ். Representation of ஐ.	
SECOND LESSON	17
Straight down strokes representing க் & ப். Loops representing உ & ஊ, and dots இ & ஈ.	
THIRD LESSON	33
Hooks representing எ&ஏ. Representation of ஔ & ஃ.	
FOURTH LESSON	49
Curves representing ம், ந், ன், ட், ச், ஸ், ஷ், ழ் & ண். Representation of ஜ், ஹ், & க்ஷ்.	
FIFTH LESSON	65
ங் & ஞ். Small quadrants representing combinations of short vowels and soft consonants	
SIXTH LESSON	81
Doubled consonants	
SEVENTH LESSON	97
Miscellaneous contractions	
CONCLUSION	111

FOREWORD

By M. R. Ry., Dewan Bahadur

R. V. Krishna Ayyar, Avl., B.A., M.L., M.L.A.,

Secretary, Madras Legislative Council.

Shorthand has existed from very ancient times and is one of those discoveries which have contributed a great deal to the education, welfare and happiness of mankind. It has enabled the spoken word to reach audiences far removed by time or distance from the speaker and has made possible the production of contemporary records, (e. g. *Hansard*) which have become national and international possessions.

2. Shorthand has made remarkable strides in England and in the countries of Europe. There are various systems of shorthand, but the most popular in use in the English language is that associated with the name of Sir Isaac Pitman.

3. The merit of Pitman's system lies in its phonetic quality which makes its application possible to new words and phrases, and ensures its scientific development at the hands of resourceful practitioners. At page 233 of the biography of Lord Carmichael of Skirling by his wife, it is stated :

"Lord Carmichael was accustomed to speak a few sentences of Bengali . . He would write out in English the ideas he wished to express. He would then get one of his clerks, Amrita, who was a good Bengali scholar, to translate them into Bengali. Amrita would read the translation carefully over to him while he took down the Bengali words in Pitman's shorthand, which had been learned in Parliamentary days. When he had practised the pronunciation, he would try the effect on another clerk. He worked at the sounds until he got them perfectly; and the effect on his audience was remarkable"

The phonetic system of Pitman made it possible for Lord Charmichael to speak to the Bengalis in their mother-tongue.

4. Various attempts have been made in this country to apply the Pitmanite system to the Indian vernaculars. From the *Encyclopaedia Britannica*, we learn that at the Muhammadan Educational Conference of 1905, Mirza Habib Hosain introduced a system of shorthand for Hindi and Urdu, that he was given a medal for it, and that it afterwards came to be known as ***Habib Samia***. Similar attempts were made to apply the system to

Bengali and Marathi. As regards our Province, as long ago as 1909, Rao Sahib Srinivasa Rao, an officer of the Police under Government, invented a system of Tamil shorthand, trained a batch of students in that system, and actually brought out a Tamil shorthand instructor. The late Diwan Bahadur L. D. Swamikannu Pillai—himself a high authority on shorthand—wrote an introduction to that book in which, among other things, he referred to the difficulties of applying any of the known systems of shorthand to the Tamil language and commended the work of Mr. Srinivasa Rao as "having met those difficulties with truly remarkable ingenuity and constructive skill." In devising his system, Mr. Srinivasa Rao followed the Pitman system, deviating, to use his own words, from the principles of that system whenever necessary to suit the requirements of the Tamil language. He is said to have invented a system of Telugu shorthand also based on the Pitman system. Recently, Mr. N. Deva Rao, B.A., retired Chief Reporter and Assistant Secretary to the Government of Mysore, invented a system of shorthand-writing in Kanarese, which is said to have been so far successful that the Government of Mysore have appointed two reporters acquainted with that system for reporting speeches made in Kanarese in their Representative Assembly.

5. I am sorry that I do not possess sufficient practical knowledge of the technique of shorthand, to state how far the methods and outlines employed in this book are superior to those already in the field and how far the author has really succeeded in getting over the numerous difficulties which face a student of shorthand in attempting to apply his art to the Tamil language. The Tamil language is a highly developed language with an enormous vocabulary, of which many words are little known but are not infrequently used. Its structure is not so easy and simple as the English language and it is replete with numberless inflections and terminations which must baffle any attempt to abbreviate a word into shorthand. It consists of a large number of vowels and has a special consonant ழ which is said to be not found in any other language. The mere suffixing of certain letters like ஆ, எ and ஓ may altogether change the meaning and spirit of a whole sentence in which they may appear. Apart from these structural difficulties, spoken Tamil is not as grammatical and formal as written Tamil. In practice, Tamil speakers have all the faults of bad speaking: too rapid delivery, absence of precision, undue colloquialism or classical pedantry, and so on. It is therefore not surprising that previous attempts at the introduction of a shorthand system in Tamil have not succeeded in making it popular.

6. In addition to the internal difficulties of devising a suitable system of shorthand for the language, the absence of encouragement to persons possessing knowledge of Tamil short-hand has no doubt contributed to its failure to attract a larger number of votaries than it has done.

7. In so far as the absence of encouragement was one of the contributory causes of the paucity of reporters in Tamil shorthand, it may be said with some confidence, that it will very soon cease to operate. We are on the eve of a great extension of the parliamentary form of Goverment in this Province. Now, parliamentary Government, as its very name implies, is Government by talking. Speeches will be made not only in the two chambers of the Provincial legislature but outside, in the constituencies. The Press might have at one time been an unwelcome intruder upon the solemn privacy of Parliament, but at present, there is scarcely a speaker in any Indian legislature who is not anxious to have his speech reported in full. With enlarged franchise and contracted constituencies, a larger number of persons unacquainted or insufficiently acquaint-ed with English are sure to come into the legislature than now. Under Section 85 of the new Constitution Act, " the rules of procedure

of the chamber or chambers, and the rules, if any, with respect to joint sittings, shall provide for enabling persons unacquainted or not sufficiently acquainted with English, to use another language." Linguistic patriotism and a growing sense of the importance of, and place due to, the vernaculars in the country are sure to add to the demand for the reporting in full of speeches made in the vernaculars, in the same manner as speeches made in English. Parliamentary forms and methods have a tendency to invade into non-legislative bodies, and there will be demand for a report of speeches made in the City Corporation and other local bodies in the Presidency and in co-operative societies and similar bodies. I visualise a time when, with increase in business and with a fuller realisation of the advantages of economising time and labour, Tamil shorthand-writers will be appreciated and employed in business-houses, courts and lawyers' offices. If ever the time was propitious for introducing a system of Tamil shorthand, it is now.

8. Every attempt to invent, introduce and popularise a system of vernacular shorthand should therefore be welcomed and encouraged.

9. The features of a satisfactory system of shorthand are:

(i) the ease of writing it ;

(ii) its legibility ;

(iii) the extent of brevity secured consistent with accuracy ; and

(iv) its scientific character on which is founded its internal capacity for development to meet new demands and requirements.

The would-be author of a new system of shorthand for a language for which no shorthand exists, must himself have a live and varied acquaintance with more than one of the existing systems of shorthand in one or more languages. Without such acquaintance, he will neither have the knowledge nor the resourcefulness which is necessary to enable him to devise new signs or symbols to meet the special requirements of the language or to avoid the defects which would make it unworkable in that language. Such an author should also possess a more or less thorough knowledge of the grammar and the structure of the language for which he proposes to construct a shorthand system. I feel convinced that a straight and slavish adaptation of the Pitmanite system of shorthand to Tamil will not give good results.

10. Nobody is more competent than the author of this book to undertake the task of preparing a reliable system of Tamil shorthand. He has been in actual working touch with shorthand for many years, has been a reporter for a daily newspaper, and is now a reporter in the service of the Madras Corporation. A perusal of this book will show his grasp of the phonetic structure of the Tamil language. He has shown commendable enterprise, patriotism and patience in writing this book and making it available for the learners of Tamil shorthand. He deserves also to be congratulated for his foresight in writing his book in Tamil.

11. I am confident that his attempt will meet with the success which it undoubtedly deserves.

Fort St. George, 9th December 1935. } R. V. KRISHNA AYYAR.

INTRODUCTION

I publish this book in the confident hope that it provides the means by which the difficulties that stand in the way of the development of Tamil Shorthand can be overcome.

The absence hitherto of offers of salaried appointments to men trained in the art of Vernacular Shorthand is generally supposed to be the reason why even a beginning has not been made in this branch of learning. This supposition is, however, erroneous. It is true that if employers had made a pronounced demand for Tamil Shorthand-writers, some men would have trained themselves in the art to the extent they could. But it does not follow that, because there has been no such demand, there ought to be practically no one qualified to meet it.

We, in South India, are known to produce, for every learned profession, a much larger number of men than can be provided for; and in the Shorthand profession especially we have many qualified men who are unable to find employment either here or in other parts of the country. If some at least among them had been trained in Tamil Shorthand instead of English, they could have easily created scope for their own employment in different offices.

Apart from those who take to an art entirely for the sake of the immediate utility that it affords, there are others who learn it for its own sake. If Shorthand is presented, not as a mere series of devices, arbitrarily prescribed, for recording spoken matter, but as a real art, developed systematically with a definite aim to serve the language to which it is applied, it cannot fail to be classed among the subjects of cultural study. Here lies the real reason why this art, as applied to the Tamil language, has made little progress, notwithstanding the fact that an initiative was made as far back as a quarter of a century ago in an adaptation of Pitman's Phonography.

Theoretically, a system of Shorthand which is useful in the case of one language ought not to fail in the case of another. But Indian Vernaculars are different from English in many respects, and Shorthand systems even with reference to the English language are found to require modifications from time to time. Actual experience has demonstrated that Indian languages have no use for adaptations of English Shorthand systems but require new systems suited to their own peculiarities.

Terminal additions play a very important part in Tamil, as in other Indian languages; whereas in the English language separate words,

not subject to great inflexion, take the place of terminations. For example, the meaning of the five words 'at the time of the' is conveyed by the brief termination போது in Tamil. Again, in respect of Indian languages, the consonants form the mere body, while the vowels take the place of the soul; whereas in English one finds that in many cases skeletons can represent the actual words themselves.

Considering these and other special features which distinguish the language of Tamil, I have constructed the system set forth in this book entirely with reference to the needs of this language and, therefore, of necessity differing very widely from English systems. I have at the same time rested it on general principles which underlie the best among such systems.

I may briefly mention here the principal features of this system:

1. Vowels have been assigned direct representation, and are shown by circles, loops and hooks—symbols which are the easiest for the hand to write. Only two vowels are represented by dots, as they are found capable of being read in outlines even without the dots in most cases.

2. Consonants are shown by lines, straight and curved, mostly of one length

These strokes number just sixteen in all.

3. Thick and thin writing, which is followed in most English systems, to signify either an addition to or an alteration of the sounds represented by thin strokes. by thickening them, is a useful device within certain limits. But as it is more suited to copying and drawing than to fast writing, and as there is very little possible use for it in Indian Vernaculars, I have kept all the symbols of this system to one quality.
4. Outlines are formed by joining vowels and consonants in the order in which they compose words, and there is no more omission of vowels than of consonants.
5. Special contractions and position-writing have been avoided. as experience has shown that complications must not only prolong the course of learning, but also hinder natural movements, which alone can help speed.
6. Words of very frequent occurrence are represented by brief forms, wich are quite naturally combined into phrases without effort of memory.

7. The course has been reduced to the smallest compass; and theory and practice go side by side from the outset. Thereby the need is obviated to learn successive styles of writing and to unlearn one when learning the next.

In Western countries Shorthand is taught to boys and girls when they are still very young, the idea being that this art is best learnt at the stage when memory and hand begin to be cultivated. Instruction in this book is drawn up in the Tamil language itself, so that the book may be of maximum help to boys in schools who may not have become proficient enough to follow instruction in English.

Shorthand, rightly understood and developed, is both an intellectual exercise and a part of language itself. The language of Tamil is great in many respects — in the sweetness of its diction, in the historicity of its origin, in the number of people who speak it as their mother-tongue, in the beautiful poetry and scientific literature it possesses, and in the astonishing speed with which it has adapted itself to the needs of modern communication. We see an ever-increasing output of prose literature, journalism and public speaking in this language. A few years ago, through the efforts of the

University of Madras, a Tamil Lexicon Committee was formed, and the valuable results of its labours are before us. In the Madras Legislative Council and the Council of the Corporation of Madras, which formerly were transacting business entirely in the English language, and whose proceedings are published elaborately in the Press and *verbatim* in their own official reports, nowadays Tamil is employed as well as English. These two principal assemblies of South India are shortly going to be reconstituted with added strength and based on a widely extended electorate, and this change can reasonably be expected to be followed by a large increase in the extent of speaking in Tamil in these Councils and other local bodies. Now is an opportunity to those interested in the promotion of Tamil learning to realise the larger purposes of Shorthand ; and, remembering that this language had a system of Shorthand in the historic days of the *Sangam*, to foster anew the study of this art as an aid to achieve the great end of language—the forcible, just and subtle expression of human thought.

RIPON BUILDINGS,
Madras, 5th Dec. 1935 } **N. Subramaniam.**

EXPERT OPINIONS.

I

To record vernacular speeches which are daily growing in number in the councils of public bodies and at public meetings, knowledge of vernacular shorthand is essential. Mr. N. Subramaniam, Council Reporter, Corporation of Madras, has invented a system of Tamil Shorthand with his knowledge of the various systems of English Shorthand. I carefully studied the principles adopted by the author and have come to the conclusion that the book. though capable of further improvement, does satisfy to a very large extent the conditions necessary for accurately reporting any Tamil speech, colloquial or literary. I am sure that even those who know only Tamil can easily master the principles in a short time.

MADRAS,
12-12-1935.

R. GANESA AYYAR,
Retired Chief Reporter of "The Hindu" Madras, & President of the Presidency Shorthand Association, Triplicane.

II

As one who has studied the late Mr. Srinivasa Row's system of Tamil shorthand and passed the Advanced Grade Examination of the Government of Madras under it (1921), I am in

a position to compare it with that of Mr. N. Subramaniam, the author of this useful treatise. This new system is free from such complications as thick and thin strokes, position-writing, detached vowels, halving and doubling, etc. It is scientific and easy of being learnt in a short space of time by students of average ability. In these days when Tamil as a medium of expression is coming to its own in the affairs of the State, a system such as this is bound to prove a boon to the thousands of unemployed youths in this Presidency.

I have great pleasure in recommending this valuable book to the discerning public, with confidence in its worth, as many of my students who were following the older system find this new one easy to learn and practise.

I congratulate the author of this timely and valuable publication. He has by this effort of his laid the public under a debt of gratitude.

DINDIGUL,
12th Dec. '35.

S. Authinarayan, P.C.T.,
Managiug Instructor, The "Ideal" Shorthand & Type-writing Institute, and "Hindu" Correspondent.

முதற் பாடம்.

உயிரோசைகள்

◦   ○   ◦̣   ○

அ   ஆ   ஒ   ஓ

மேலே காட்டி யிருக்கும் நான்கு அடையாளங்களையும் கவனிக்க. முதலாவது ஓர் சிறிய சுழி; அது அ என்னும் உயிரோசையைக் குறிக்கிறது. அடுத்தது ஓர் பெரிய சுழி; அது ஆ என்ற ஓசையின் குறி. மூன்றாவது சுழி முதற் சுழியையும், நான்காவது சுழி இரண்டாவதையும் ஒத்திருக்கின்றன. ஆனால் அப் பிந்திய விரண்டு சுழிகளுக் கருகில் புள்ளி யிட்டிருப்பதைப் பாருங்கள். புள்ளியோடு கூடிய சிறிய சுழி ஒ வையும், பெரிய சுழி ஓ வையும் குறிக்கும்.

வேலை

இந் நான்கு உயிர்க் குறிகளையும் கடுதாசி, பென்ஸில் எடுத்து, பலமுறை எழுதுக. கைப் பழக்கம் உண்டாவதற்கும், அடையாளங்கள் மனதிற் பதிவதற்கும் இவ்வேலை அவசியமாகும்.

வரிகள் அச்சிடப்பட்ட காகிதம் அவசியமன்று; ஆயினும் இக் கல்வியைக் கற்கையில் சிறிது காலத்திற்கு வரியிட்ட பேபரை உபயோகிப்பதனால் நலமுண்டாகும். துண்டுக் காகிதங்களுக்குப் பதிலாக, தைக்கப்பட்ட நோட் புஸ்தகம் உபயோகிக்கப் படுவதும் நலமே. எழுதும் கோலுக்கு, பென்ஸிலே போதும்.

உயிர்ச் சுழிகள் இங்குத் தனித்தவாகக் காட்டப் படுகையில், அவைகள் வரியின் மேற்புறம் அதை ஒட்டினாற் போல் எழுதப் படவேண்டும். கோடுகளுடன் சேருகையில் சுழிகள் வரியை விட்டு நீங்குவதுமுண்டு; அது பின்னர் தெரிவிக்கப்படும்.

சுழிகள் மேலே காட்டப்பட்டவை போல் மெல்லியவை யாகவும் சக்கர வடிவத் துடனும் அமைய வேண்டும். இக் குறிகள் சில விடங்களில் இடது பக்கமாயும் வேறு இடங்களில் வலது பக்கமாயும் சுழிக்கப் படும். ஆகையால் கையை இரு பக்கமும் சுழற்றி எழுதப் பழகிக் கொள்க.

மெய் யோசைகள்

த் ல் ள் ய் ர்,ற் வ்

இம் மெய்க் குறிகள் மெல்லிய நேர் கோடுகள். முதல் மூன்றும் சிறியவை; அடுத்த மூன்றும் பெரியவை. இவைகளாற் குறிக்கப்படும் மெய் யோசைகளை மேலுள்ள சித்திரத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

த், ய் என்பவைகளின் குறிகள் வரியில் படுக்கையாய் அமைந்துள்ளன. ல், ர் என்பவைகளின் குறிகள் வரியிலிருந்து மேல்நோக்கி எழுதப் பட்டுள்ளன. ள், வ் என்பவைகளின் குறிகள் கீழ் நோக்கி வரியில் வந்து தங்குமாறு போடப் பட்டுள்ளன.

வேலை

இம் மெய்க் குறிகளையும் பலமுறை எழுதிப் பழகுக. ஒவ்வொன்றின் நீளம், இடம் போக்குகளைக் கவனித்து, நேராகவும் மெல்லியதாகவும் எழுதுக. இவ்வாறு மெய்க் குறிகளும் முற்போக்குடைய கோடுகள்.

மேலே கற்பிக்கப் பட்ட பத்துக் குறிகளையும் வரிசைப் படியும் வரிசை மாற்றியும் நோட் புஸ்தகத்தில் எழுதி, பின்னர் அவைகளை வாசித்துப் பழகிக் கொள்க. வாசிப்பதும் மிக அவசியமானது.

சுழிகளைப் போலவே கோடுகளும் தனித்தெழுதப் படும் பொழுது, வரியிற் றங்குமாறு அமைக்கப் படுகின்றன. சொற் குறிப்புகளில் இவைகளும் இடம் மாறுவதுண்டு; ஆனால் நீளம், மென்மை, நேர்மை, போக்குகளில் மாறுபடா.

சுழிகளைச் சேர்க்கும் முறை

ஓர் சொல்லுக்குக் குறிப்பமைக்க, அச் சொல்லின் ஓசைகளுக்காய குறிகளை, ஓசைகளின் வரிசைப் படியே சேர்க்க வேண்டும். இதுவோர் முக்கியமான கொள்கை.

தாய் என்ற சொல் த் ஆ ய் என்ற வோசைகளாலும், தாயோ என்ற சொல் த் ஆ ய் ஓ என்ற வோசைகளாலும், அது என்ற சொல் அ த் உ என்ற வோசைகளாலும் ஆக்கப்படுகின்றன. ஓசைகளின் வரிசை மாறின், சொல் வேறாகலாம், அல்லது எச் சொல்லும் ஏற்படாது போகலாம். குறிகளைச் சேர்க்கையில் இவ் விஷயம் நன்கு அறியப் படவேண்டும்.

ஓர் சொல்லின் ஓசைகள் யாவும் ஒரே தடவையில் எழுதப் படவேண்டும். சொற் குறிப்பு முடியும் வரை பென்விலைக் கடுதாசியிலிருந்து எடுக்கக் கூடாது. புள்ளி வைக்கப்பட வேண்டின், குறிப்பை யெழுதிய பின் தான், அது கவனிக்கப் படவேண்டும்.

சுழிகளும் கோடுகளும் சேர்ந்து சொற் குறிப் பாகுமிடத்து, சொல்லின் முதல் மெய்க் குறி வரியிற் றங்க வேண்டும். மற்ற மெய், உயிர்க் குறிகள் அப்படி அமைய வேண்டு மென்பதில்லை; ஓர் குறி முடியு மிடத்தே அதற்கடுத்த குறி ஆரம்பிக்கப் படவேண்டும்.

ஓர் நேர் கோடுடன் ஒரு சுழி சேருகையில், அக் கோட்டுக்குத் தக்கவாறு சுழியின் இடமும் போக்கும் தீர்மானிக்கப்படும். சுழிக்கு இடம் தீர்மானிப்பதில், பொது வழிகளும் சிறப்பு வழிகளும் உள. பொது வழிகள் இதன் கீழ் விவரிக்கப் படுகின்றன. சிறப்பு வழிகள் போகப் போகக் காணப்படும்.

சுழியின் அமைப் பிடத்தைக் கற்பது, முதலிற் சற்று கடினமாகத் தோன்றலாம். ஆயினும் சிறிது பழக்

கம் வருகையில் அது எளிதாகிவிடும். ஆகையால் அதற்காய விதிகளை அநுசரித்தே குறிப்புகளெழுதவும்.

ஓர் கோட்டின் பின்னால் வரும் சுழி, கோட்டின் மேற்புறம் வைக்கப்படும். கோடு போட்டதும், கையை நிறுத்தாமலும் திருப்பாமலும், சுழி முற்றிலும் கோட்டின் மேல் அமையும் படியும் எழுத வேண்டும். கீழுள்ள உதாரணங்களைக் காண்க :—

த யா லொ ரோ ள வா

வேலை

மேலே போதிக்கப்பட்ட மெய், உயிர்க் குறிகளைக் கொண்டு (6 x 4) 24 உயிர் மெய்க் குறிகள் அமைக்கலாமல்லவா? அவைகளை இங்கு சொல்லிய முறைப்படி எழுதுக.

உயிரோசைகளைக் கொண்டு ஆரம்பமாகுஞ் சொற்களைக் குறிப்பதில், முதலாயுள்ள உயிர்க்குறி, அதை யடுத்த மெய்க் குறியின் கீழ்ப் புறம் வைக்கப் படும்.

கோட்டின் முன் வரும் சுழி, பின் வரும் சுழியின் போக்குக்கு மாறாக எழுதப் படும். அதாவது, சுழி முந்துகையில் கையை இடது புறம் திருப்பியும், சுழி பிந்துகையில் கையை வலது புறம் திருப்பியும் அச்

சுழியை எழுத வேண்டும். கீழுள்ள உதாரணங்களைக் காண்க :—



ஓயா ஆறு ஓவா அள அல ஓது

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக :

அல், அள், அய் (ஐ), ஆய், ஆல், ஆர், ஆள், ஓல், ஓய், ஓர், அதோ, அலா, அற, அறு, அரோ, ஆய, ஆயா, ஆற, ஆரோ, ஆள, ஆளா, ஆவ, ஓதா, ஓய, ஓலா, ஓவ.

இரண்டு மெய்க் கோடுகளின் நடுவே ஓர் சுழி போட வேண்டுமிடத்து, அச்சுழி பொதுவாய் முதற் கோட்டின் மேற்புறமே தங்கும். உதாரணங்கள் :

தாய் தாதா தள் யாதோ ஆயாள் அலர்

அலல் அறல் ஓரார் அலாத அலய் (அலை) அறாத



அரய் (அரை) அலள் ஆறுள் ஆளாள் அளாவ வாள்



அவள்　　வாவா

மேலுள்ள குறிப்புகள் ஒவ்வொன்றையும் பார்க்கையில், சுழிக்குப் பின்னுள்ள கோடு, முந்திய கோட்டின் போக்கிலேயோ அல்லது இறங்கியோ அமைந்திருப்பது தெரியவரும். அதனால் அக்கோட்டின் முன்னுள்ள சுழியை மேல் பக்கமே வைப்பது எளிதாகிறது.

படுக்கைக் கோடும், சுழியும் மேனோக்கிய கோடும் என்ற வரிசை; அல்லது கீழ் நோக்கிய கோடும், சுழியும் படுக்கை அல்லது மேனோக்கிய கோடும் என்ற வரிசையாகக் குறிகள் வருமிடத்து இடையேயுள்ள சுழியை முதற் கோட்டின் மேற்புறத்தில் வைப்பது சுலபமில்லையாகையால், அதைக் கீழ்ப் புறத்திற்கு மாற்றி விட வேண்டும். உதாரணங்கள்:



தார்　　தோல்　　யார்　　அயல்　　ஆளை　　ஆளாத

வாதோ　　வாய்　　வார்　　வால்　　ஆளார்　　ஆளால்

மற்ற சந்தர்ப்பங்களில் சுழி, அதன் முன்னுள்ள கோட்டின் இறுதியில், அதன் மேற்புறத்திலேயே வைக்கப் படும். கீழுள்ள உதாரணங்களையும் பார்க்க:



அலால் அலாத அலாள் அதன் அதை அதர்



அவன் அவர் அவை

வேலை

இதுவரையிற் கற்ற விஷயங்களைத் திரும்பவுமோர் முறை வாசித்து, அதன் பிறகு மேலே வெவ்வேறிடங்களில் உதாரணங்களாகக் கொடுக்கப்பட்டுள்ள சொற் குறிப்புகளைப் பார்த்தெழுதுக.

தள்ளப்படும் குறிகள்

ஓ, ஒ வைக் காட்டும் புள்ளி அநேக சொற்குறிப்புகளுக்கு அவசியமில்லை. அடிக்கடி கேள்விப் படாத சொற்களைக் குறிக்கையில் மாத்திரம் புள்ளி உபயோகிக்கப் படலாம். அது சுழியின் எப் பக்கத்திலும் போடப் படலாம்; சுழியின் அருகிலிருக்கவேண்டு மென்பது தான்.

ஐ என்பது அய் என்ற இரண்டு ஓசைகளின் சேர்க்கை. அது பொதுவாக அ என்றே கருதப்பட

லாம்; எனின் ஐ யிலுள்ள ய் குறிக்கப்படவேண்டிய தில்லை. இரண்டு ஐ கள் சேர்ந்து வருமிடத்து, முதல் ஐ யானது அ என்றும் இரண்டாவது, ய என்றும் கொள்ளப்படும். தலையை என்ற சொல் தலய என் றெழுதப்படும். தலையோ என்பதை தலயோ எனக் கொள்வோம்.

ஓர் சொல்லின் இறுதியில் அ வருமாயின் அது எழுதாது விடப்படலாம். தர என்ற வார்த்தை தர் என்றும், தரை என்றது தர என்றும் எழுதப்படலாம்.

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக:

அவா, அதோ, அவளோ, ஆவல், ஆயர், ஆதர், ஐயா, ஓதாத, ஓலை, ஓதல், ஓயாத, தவறு, தலைவா, தளர், தாதை, தையல். தொலை, தோள், வயல், வராத, வதை, வாயால், வாரை, வையார், ராயர், யாதால்.

தனிக் குறிச் சொற்கள்

பாஷையில், சில சொற்கள் அடிக்கடி உபயோகப் படுகின்றன. அவைகளுக்கென ஒடுங்கிய குறிகள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. அவைகளிற் சில கீழே காணப் படும்.

இது	அது
அளவு, இவ்வளவு	அதை
இரு	இதை
செய், செய்ய	அதோ
இவன், இவர்	அவ்வளவு
செலவு, செலவை	ஒரு, ஓர்
இல்லை, அல்ல	ஆக, ஆய்,
இல்லாத, அல்லாத	அவன், அவர்
இல்லையா	இவை
இதோ, தா	அவை

குறிப்புச் சேர்க்கை

விரிவெழுத்திற் போலவே குறிப்பெழுத்திலும் பொதுவாய் சொற் குறிப்புகள் ஒன்றோடொன்று சேராமலே எழுதப்படும். ஆயினும் மேலே கூறியுள்ளவை போன்ற சொற்கள் வாக்கியங்களில் வெவ்வேறு வகையில் ஒன்றையொன்று பற்றுகின்றனவாதலால் அப்படிப் பற்றுண்ட சொற்களின் குறிப்புகளைச் சேர்த்தெழுதுவது நலமாகும். ஐக்கியமாகுங் குறிப்புகளிற் சில கீழே காணலாம்.

இதுவொரு

ஆகவில்லை

இருக்கவில்லை

ஓரளவு

செய்யவில்லை

அதுவல்ல

இவர் அல்ல

 அளவாக

செலவு செய்ய

செலவாக

இவைபோன்ற வேறு ஐக்கியக் குறிப்புகளும் உண்டாக்கப்படலாம். ஆனல் இவ்விதம் குறிப்புகளைச் சேர்ப்பதை ஓரளவுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும். பற்றல்லாச் சொற்களை வெவ்வேறாகவே குறிக்கவேண்

டும். ஐக்கியக் குறிப்பு சுலபமாய் ஆக்கக்கூடாவிட்டால், அல்லது பிறகு அதை வாசிப்பது கடினமாகுமென்றால், பற்றுள்ள சொற்களையுங்கூட வெவ்வேறாகவே குறிக்க வேண்டும்.

உருபு, விகுதிகள்

செய் என்னுஞ் சொல்லின் குறிப்போடு ற் குறியைச் சேர்த்தால் செய்கிற என்பதாகும். இதில் கி யும் கடைசி அ வும் தள்ளப்படுகின்றன. முதற் குறிப்போடு த் குறியைச் சேர்த்தால், செய்த என்பதாகும். செய்ய என்பது செய் எனக் குறிக்கப்படும்.

செய்தாய், செய்கிறாய், செய்வாய் என்ற சொற்களின் கடைசி ய் விலக்கப்படும். ஆகவே இவைகளின் குறிப்புகள் பெரிய சுழியைக் கொண்டு முடியும்; அச்சுழி அதன் முன்னுள்ள கோட்டின் மேற்புற மிருக்கும் என்பதை உணர்க.

செய்தார், செய்வார் என்பவைகளைக் குறிக்க சுழியைக் கீழ்ப்புறம் மாற்றி அதன் பிறகு ர் கோட்டைப் போடவேண்டுமல்லவா? இதற்கு, சுழியைக் கீழாக மாற்றுவதே போதும்; எனின் ர் ஒழிக்கப்படலாம்.

செய்தாய், செய்தார் என்பவைகளின் குறிப்புகளில் ய், ர் விடப்பட்டு எஞ்சிய குறிப்புகளில் ஆ சுழி இடம் வேறுபடுமென அறிக.

செய்கிறார் என்பதை முற்றிலும் எழுதும்போதும் ஆ சுழி இடம் மாறுவதில்லை. ஆயினும் ர் ஐத்

தள்ளுகையில் ஆ வை மேலிருந்து கீழ் மாற்றியே எழுதவேண்டும். மாற்றாவிடின் செய்கிறாய், செய்கிறார் என்றவைகளின் வித்தியாசம் குறிப்பில் காணப்படாது.

செய்தோர், செய்வோர் என்றவைகள் செய்தார் செய்வார் என்றே இடம் மாறிய பெரிய சுழியால் குறிக்கப்படும்.

அ வின் சிறிய சுழி இடம் மாறி எழுதப்படின் அது -வர் என்பதைக் குறிக்கும்.

இடம் மாறிய சுழிகளோடு ள் கோட்டைச் சேர்த்து -ஆர்கள், -வர்கள் என்றாக்கலாம்.

இம் முறைகளின்படி கீழ் வரையப்பட்டுள்ள ஒடுங்கிய குறிப்புகளைப் பார்க்க.

 செய்தல்

செய்யல்

செயல்

 செய்த

செய்கிற

 செய்ய

செய்தார், செய்தோர்

செய்கிறார்

செய்வார், செய்வோர்

செய்வார்கள்

செய்யா, செய்யாய்

 செய்யார்

செய்யாத

செய்தாய்

செய்தவர்

செய்கிறாய்

செய்கிறவர்

 செய்தால்

செய்வர்

செய்தவர்கள்

குறிப்புகளினிறுதியில் **ள்** கோடு -**கள்** என்பதைக் குறிக்கும்; ல் கோடு -**ஆல்** என்பதைக் குறிக்கும். உதாரணங்கள்.

அவர்கள்

இவனால்

 தலைகள்

 வாயால்

அவைகள்

ஆகையால்

வேலை

மேலுள்ள தனிக் குறிப்புகள், ஐக்கியக் குறிப்புகள், உருபேற்ற குறிப்புகளைப் பார்த்தெழுதிய பின் கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் எழுதுக.

ஆதல், ஆவாய், ஆவார், ஆகிறார், அவர்கள், தராத, செய்தார்கள், வராதவர், செய்கிறவர்கள், இருக்கிறவர்கள், அதுவோர், தாயார், யார், யாதவர், செய்தலால், செய்வதால், அவர்களால், ஒருவர், இல்லாதவர், அளவில்லாத, ஆகிறதை, அவைகளை, ஓய்வார், செய்யாதவர்கள்.

வாக்கியங்கள்

வேலை

கீழுள்ள வாக்கியக் குறிப்புகளைப் பார்த்தெழுதுக:-

இது ஒரு வாள்



யார் தலைவர் ஆவார்

அவள் தாய் அல்லவா

அதைச் செய்யத் தயார் ஆவாய்



அதோ யாரோ ஒருவர் வருகிறார்

கீழுள்ள வாக்கியங்களைக் குறிப்பெழுத்து முறையில் வரிக்கு ஓர் வாக்கியமாக எழுதுக :—

அவள் அலைகிறாள்.

அலை ஓயவில்லை.

ஐயர் வருகிறார்.

இவர் ஒரு லாயர்.

ராதா அதை செய்தாள்.

இது யார் செய்த வலை?

அவ்வளவு செலவு ஆகிறதா?

அவன் இதைச் செய்த ஆள்.

இரண்டாம் பாடம்.

க்　　　ப்

மேலே இரண்டு புதிய மெய்க் குறிகள் இருப்பதைக் காண்க. இவைகளும் மெல்லிய நேர் கோடுகளே. **த், ல், ள்** கோடுகளைப் போல இவைகளும் சிறிய அளவுள்ளன. இவை மேலிருந்து கீழாக வரியை வந்து தொடுமாறு எழுதப்படும். ப் கோடு நேர் கீழாகவும், **க்** கோடு சிறிது பிற் போக்காகவும் அமையும்.

க் கோடும் **ல்** கோடும் ஒன்று போல் ஒன்று எழுதப் படாது; ல் கோடு சிறிது படுத்த வசமாயும், **க்** கோடு சிறிது நிமிர்ந்த வசமாயும் எழுதப் படவேண்டும். கீழுள்ள சித்திரத்தைப் பார்க்க.

கல்

ல்க்

இப் புதிய மெய்க் குறிகளுடன், சுழிகள், முதற் பாடத்தில் கூறிய முறைப்படியே சேர்க்கப்படும்.

க் அல்லதுப் கோட்டின் முன்னே சுழி வருமாயின் அது கோட்டுக்கு இடது புறமும், பின்னே சுழி வருமாயின் அது கோட்டுக்கு வலது புறமும் அமையும்.

க அல்லது **கா** என்றதன் குறிப்போடு வேறு கோடு சேர்க்க, க் கோட்டின் வலது புறத்துச் சுழி இடது புறம் மாறும்.

உதாரணங்கள்:



ஆகா ஆகாத ஆகார் ஆகாள் காய் கால்



காவல் கோபால்

ப் கோடும், சுழியும், **க்** கோடும் வருமிடத்து நடுவுள்ள சுழி முதற் கோட்டின் வலது புறமே தங்கும். பின்னால் வருவது வேறு கோடாயின் சுழி இடது புறத்திற்கு மாற்றப்படும்.

உதாரணங்கள்:—

பகல் போவார் பாளை பாதை பாய் பற

காகா, பாபா, என்றவைகளைக் குறிக்கையில் கோடுகளுக் கிடையே யுள்ள சுழி வலது புறத்திலேயே தங்கும்.

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக:—

பகை, பார், பாவை, பொய், பொறை, போக, போல, போபோ, போர், போய், போதா, போவாள், கை, கல், கதை, கவை, கால்கள், காலை, கையை, கொல்ல, கோல், கோதை, கோவை.



உ ஊ

மேலுள்ள இரண்டு நீளச் சுழிகளைப் பார்க்க. ஒன்று உ வையும் மற்றொன்று ஊ வையும் குறிக்கும். உ சுழியின் அருகில் ஒரு புள்ளியிட்டால், அதுவே ஊ வைக் குறிக்கும்.

ஊ வும் பொதுவாக உ என்றே குறிக்கப்படலாம்; அதாவது சுழியினருகே புள்ளி அவசியமில்லை. என்றாலும், அடிக்கடி கேள்விப்படாத சொற்களைக் குறிக்கையில் ஊ வைக் காட்ட, புள்ளி உபயோகமாகும்.

உ, ஊ வைக் குறிக்கும் நீளச் சுழி, வட்டச் சுழிகளைப் போலவே சில விடங்களில் வலது புறமாயும் சில விடங்களில் இடது புறமாயும் சுழிக்கப்படும். தவிர,

ஆங்காங்கு உள்ள கோட்டிற்குத் தக்கவாறு இந் நீளச் சுழியின் இடமும் போக்கும் மாறும்.

உதாரணங்கள்:—



ஊது குரு புது உளு உரு

மேலுள்ள உதாரணக் குறிப்புகளில், நீளச் சுழி வெவ்வேறு வகையாய் அமைந் திருப்பதைப் பார்க்க. அது சில விடங்களில் படுக்கையாயும் சில விடங்களில் நிமிர்ந்தும் சில விடங்களில் அதன் தலை முன்புறம் சாய்ந்தும், சில விடங்களில் தலை பின்புறம் சாய்ந்தும் இருப்பதைக் கவனிக்க. இந் நீளச் சுழி எந்தக் கோட்டுடன் சேருகிறதோ அந்தக் கோட்டின் போக்குக்கு ஏற்றவாறு அமைக்கப் படவேண்டும். சுழியின் ஓர் நுனி மாத்திரமன்றி ஓர் பக்கம் முழுவதுமே கோட்டை ஒட்டி யிருக்குமாறு எழுதப்பட வேண்டும்.

முதற் பாடத்தில் வட்டச் சுழிகளைச் சேர்ப்பதற் காகக் கூறிய பொது முறைகளின் படியே நீளச் சுழியும் கோடுகளுடன் சேர்க்கப்படும். அதாவது, ஒரு வார்த்தை **உ** அல்லது **ஊ** என்ற உயிரோசையைக் கொண்டு ஆரம்பமானால், அவ் வுயிரின் குறியாகிய நீளச் சுழி, அடுத்த மெய்க்குறியானது ஓர் கீழ் போக்குக் கோடா யின் அதன் இடது புறமும், கோடு முற்போக்குடைய தாயின் அக் கோட்டின் கீழ் புறமும் வைக்கப்படும்.

உதாரணங்கள் :—

உகு உபாய உளர் உவர் உதை உயர்

உலர் உரல்

சொற்களி னிறுதியில் வரும் நீளச் சுழி, அதன் முன்னுள்ள கோடானது கீழ்போக்குள்ளதாயின் அதன் வலது புறமும், கோடு முற்போக்குள்ளதாயின் அதன் மேற்புறமும் வைக்கப்படும்.

உதாரணங்கள் :—



பாகு உருபு உதவு காது தரு

இரண்டு கோடுகளுக் கிடையே ஓர் நீளச் சுழி போடப்பட வேண்டின், அது பொதுவாக இறுதிச் சுழியைப் போலவே, அதன் முன் கோட்டின் வலது அல்லது மேல் பக்கத்தில் அமையும். சில விடங்களில் சுழியை அப்பக்கம் வைப்பதனால் அடுத்த கோடு எழுதுவது கடினமாகு மென்று முதற் பாடத்தில் கூறப்பட்டதல்லவா? அவ்விடங்களில் மாத்திரம் வட்டச்சுழிகளைப் போலவே நீளச்சுழியும் பக்கம் மாற்றி எழுதப்படும். முன் கோட்டின் வலது புறம் மற்றொரு கோடு போட வேண்டின் சுழி இடது புறத்திற்கும், மேற் புறம்

வேறொரு கோடு போடப்பட வேண்டின் சுழி கீழ்ப் புறத்திற்கும் மாற்றப்படும். இடம் மாறியும், இடம் மாறாமலும் அமையும் சுழிகளின் உதாரணங்கள் கீழ்க் காணப்படும் ;—



குகை குரல் குறைத குவளை புது பூ



பூவை புயல் புலால் தாவு ஆலூர் துகள்



தூள் துயர் துறை பாலூர் அலுவல்

ஆகவே, வட்டச் சுழிகளைப் பற்றிச் சொல்லிய பொது முறைகளின் படியேதான் நீளச் சுழிகளும் கோடுகளுடன் சேர்க்கப்படும்.

வேலை

மேலே உதாரணங்களாகக் கொடுக்கப் பட்டுள்ள குறிப்புகளைப் பார்த்தெழுதி, அதன் பின், கீழ் உள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக ;—

அகல், ஆகாய், ஆகுக, உததல், ஊதல், களவு, காலை, காதால், குலை, கூறு, கையால், கொள்கிற, பலகை, பறவை, பாலாறு, பாய்வது, புகல், புகுதல், புகார், பொதுவாக, பொய்யோ, பொறுத, போவது, போலவா, போகிறவர், போதாது, தொகை, அருள்.

இ ஈ

இ, ஈ என்னும் உயிரோசைகள் ஓர் புள்ளியால் குறிக்கப்படும். இவ்வுயிர்களைக் கொண்டு ஆரம்பிக்கும் சொற்களைக் குறிக்க, முதலில் ஓர் புள்ளியைப் போட்டு விட்டு, அதனருகில் அடுத்த மெய்க்கோடு எழுதப்படும்.

உதாரணங்கள் :—



இகல் இலர் இரவு இது இயை இளக



இவை ஈறு ஈகை ஈது ஈயாத

இ, ஈ யின் அடையாளமாகிய புள்ளி குறிப்புடன் சேராமல் ஒதுங்கி நிற்பதைக் கவனிக்க.

ஓர் குறிப்பின் முதலில் புள்ளி அல்லது சுழி வருமிடத்து, அதையடுத்த மெய்க்கோடு வரியிற் றங்குமென்றும், அக்கோடு எங்கு ஆரம்பிக்கிறதோ அங்கேதான் அம்முதற் புள்ளி அல்லது சுழி அமைய வேண்டுமென்றும் அறிக.

சொற்களின் நடுவிலும் இறுதியிலும் வரும் இ, ஈ ஒழிக்கப்படும்; அதாவது அவைகளைக் காட்டும் புள்ளி எழுதப்பட வேண்டாம்.

உதாரணங்கள் :—



இதில் அதில் அதிதி அதிக இயல் வலி

பலி வரி விதி கதி பிதிர் திகல்



தீர் ஈர் தீவு அறிய கிறி பிள

இப் புள்ளி சில குறிப்புகளுக்குக் தேவையாயின், குறிப்புகளில் எக் கோட்டுடன் சேரவேண்டியதோ, அக் கோடு முடியுமிடத்து சற்று விலகி எழுதப்படலாம்.

வேலை

மேலுள்ள குறிப்புகளை வாசித்து, எழுதி, அதன் பின் கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகளமைக்க :—

இலகு, இலை, இகள், ஈதல் ஈவோர், கவி, தீராது, திலகர், திரள், திரிய, தீயார், ஒளி, வாளி, பொலிவு, காவி, பாவி, கரி, தரி, ஆதி, ஆகி, தீரர், வீரர், பாதி, கதிர், பயிர்.

தள்ளப்படுங் குறிகள்

சொற்களி னீற்றில் வரும் உ பொதுவாக விடப் படலாம். உதாரணங்கள் :—



இரு இது காது

-ஈர் என்று முடியும் சொற்களைக் குறிக்கையில், ர் தள்ளப்பட்டு, ஈ, குறிப்புகளின் வலது (பின்) புறம் ஓர் புள்ளியால் காட்டப்படும்.

உதாரணங்கள் :—



செய்தீர் போவீர் ஆகிறீர்

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக :—

வருவது, கொள்ளு, போது, வருவீர், தீர், செய்யார், இருக்கிறீர், இருப்பீர், தாரீர்.

———

தனிக் குறிச் சொற்கள்

முதற்பாடத்தில் கற்ற தனிக்குறிச் சொற்களை நன்ருய் மனதிற் கொண்டு, இங்கு பின்னும் கொடுக்கப் பட்டுள்ள விசேஷக் குறிப்புகளைப் பார்த்தெழுதி இவைகளையும் மனதிற்கொள்க :—

காரியம்

போகிற

பிறகு

உடைய

உடன்

தவிர

அதாவது

போது

வரவு, வருவது

பொழுது

அல்லது

வரையில்

ஆகிய

இருக்க

ஐக்கியக் குறிப்புகள்

கீழே காணும் ஐக்கியக் குறிப்புகளைப் பார்த்தெழுதி, அவைகளை மனதிற் கொள்க.

 அவருடன்

வரவு செலவு

இது தவிர

போகிற பொழுது

 செய்யப்போகிற

செய்த பிறகு

 இருக்கிறபோது

இல்லாதவரையில்

ஆகிறவரையில்

அவர்களுடைய

உருபு, விகுதிகள்

குறிப்புகளினீற்றில் **க்** கோடு **-க்கு -உக்கு -ற்கு** என்பவைகளைக் குறிக்கும். அதனுடன் ஆ சுழியைச் சேர்த்து **-க்காக** என்பதைக் குறிக்கலாம்.

இல் என்னும் உருபு **ஆல்** என்பதைப் போல் ல் கோட்டாற் குறிக்கப்படும்.

உடன் என்ற உருபு மேலே ஐக்கியக் குறிப்புகளிற் காட்டியபடி நிமிர்ந்த நீளச் சுழியொன்றாற் குறிக்கப்படும்.

உடைய என்ற உருபும் அதுபோன்ற சுழியாற் குறிக்கப்படும். இந் நீளச் சுழியினுள்ளே ஓர் சிறிய வட்டச் சுழி எழுதப்படும்.

உதாரணங்கள் :—

கைக்கு

 அவைகளுக்காக

காலுக்கு

செலவுக்காக

அதற்கு

 பல்லில்

 இவைகளுடன்

 அவர்களுடைய

-அது -பது -வது -உவது என்ற உருபுகள் பக்கம் மாற்றிய நீளச் சுழியால் குறிக்கப்படும்.

 அவனது

இருப்பது

ஆவது

கொள்வது

போவது

கற்பது

முதற் பாடத்தில் செய் என்னும் வினைச்சொல்லின் வேற்றுமைகளிற் சிலவற்றிற்கு குறிப்புகள் கொடுக்கப் பட்டன. பின்னும் சில வேற்றுமைகளை இங்கு கவனிப்போம்.

செய்தான், செய்கிறான், செய்வான் என்பவைகள், செய்தார், செய்கிறார், செய்வார் என்றே குறிக்கப் படும்.

செய் என்பதின் குறியோடு நீளச் சுழியைப் பக்கம் மாற்றி எழுதி, செய்வது என்று குறிக்கலாம். அது போலவே செய்த, செய்கிற என்றவைகளின் குறிப்புகளோடு நீளச் சுழியைப் பக்கம் மாற்றிச் சேர்த்து செய்தது, செய்கிறது என்றாக்கலாம்.

பக்கம் மாற்றிப் போடப்பட்ட நீளச் சுழியோடு க் கோடு சேரின், செய்ததற்கு, செய்வதற்கு, செய்கிறதற்கு என்பவை குறிக்கப் படும்.

இவ் விகுதி க் கோட்டோடு ஆ சேர்த்து செய்ததற்காக, முதலியன வற்றைக் குறிக்கலாம்.

செய்த, செய்கிற, செய்ய என்பவைகளின் குறிப்புகளுக்குப் பின்புறம் ஓர் புள்ளி யிட்டால் செய்தீர், செய்தீர்கள், செய்கிறீர், செய்கிறீர்கள், செய்வீர், செய்வீர்கள் என்றவை ஆகும்.

இம் முறைகளின்படி கீழ் வரையப்பட்டுள்ள ஒடுங்கிய குறிப்புகளைப் பார்க்க.

	செய்வது		செய்யப் போகிற
	செய்தது		செய்யப் போகிறான்
	செய்கிறது		செய்யப் போகிறாய்
	செய்ததற்கு		செய்தவனுடைய
	செய்வீர்		செய்தபோது
	செய்கிறீர்கள்		செய்தவரையில்
	செய்வதற்காக		செய்தி
	செய்கிறதில்		செய்கை
	செய்ததுடன்		செய்தது தவிர

மேலுள்ள தனிக் குறிப்புகள், ஐக்கியக் குறிப்புகள், உருபேற்ற குறிப்புகளைப் பார்த்தெழுதியபின் கீழுள்ள சொற்களுக்கு குறிப்புகள் எழுதுக.

தலைவரது, அவளுடன், கோபாலுடைய, கோவிலில், அவனுக்கு, வயலில், கையில், வருவதால், பொதுவாய், இவருடைய, தள்ளுவது, வருகிறான், ஆறுவது, தருகிறது, போவதற்கு, பார்ப்பதற்காக, கொள்வீர், கொள்கிறீர்கள், பாய்கிறது, செய்கிறான், செய்கிறதற்கு, செய்தீர்கள், செய்கிறீர்கள், செய்வீர்கள், செய்கிறதற்காக, செய்கிறதால், செய்வதுடன், செய்கிறபொழுது.

வாக்கியங்கள்

வேலை

கீழுள்ள வாக்கியக் குறிப்புகளைப் பார்த்தெழுதுக:—

குருவி உயரப் பறக்கிறது



அது யாருடைய குரல்?

இதுவோர் தகுதி யுள்ள காரியம்



அவர் அதிக அறிவுள்ளவர்



கோபால், கோவிலுக்குப் போய் வா

கீழுள்ள வாக்கியங்களைக் குறிப்பெழுத்து முறையில் வரிக்கு ஓர் வாக்கியமாக எழுதுக :—

புலி குகைக்குள் போகிறது.
வீதியில் கார் விரைவாக வருகிறது.
அதற்குப் பிறகு யாது செய்வீர்.
அவன் அவளது பிள்ளை யாவான்.
ஊருக்கு அருகில் ஆறு பாய்கிறது.
அவனது பிதா செய்த காரியத்தைப் பார்.
இதுவரையில் ஒருவராவது இதைச் செய்யவில்லை.
கால்கள் செய்த பிறகு பலகையைப் பதிய வை.
அவன் பொருள்களை அதிக விலைக்கு விற்கிறான்.

மூன்றும் பாடம்.

உயிரோசைகளில், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஐ, ஒ, ஓ என்பவை முந்திய பாடங்களிற் கற்பிக்கப் பட்டன. மற்றவைகளை இங்கு கவனிப்போம்.

◌	·◌
எ	ஏ

மேலுள்ள இரண்டு கொக்கிகளில் ஒன்று எ ஐயும் மற்றொன்று ஏ ஐயும் குறிக்கும். எ கொக்கியினருகில் ஓர் புள்ளியிட்டால் அதுவே ஏ ஐக் குறிக்கும்.

ஏ யும் பொதுவாக எ என்றே குறிக்கப் படலாம். அதாவது கொக்கியினருகில் புள்ளி வேண்டியதில்லை.

எ, ஏ ஐக் குறிக்கும் கொக்கி, மேலுள்ள சித்திரத்தில், அதன் நுனிகள் வலது புறம் அமையுமாறு எழுதப்பட் டிருப்பினும், கோடுகளுடன் சேருகையில் வெவ்வேறு வகையாகத் திருப்பி எழுதப்படும். அதனால், சுழிகளைப் போலவே, கொக்கியும் சில விடங்களில்

கையை வலதுபுறம் திருப்பியும் வேறு இடங்களில் கையை இடதுபுறம் திருப்பியும் எழுதப்படும்.

கொக்கியைச் சேர்க்கும் முறை

ஓர் கோட்டின் எந்தப் பக்கத்தில் சுழி சேர்க்கப் படுமோ, அதற்கு மாறாகிய பக்கத்தில் கொக்கி வைக்கப் படும்.

ஓர் சொல்லின் ஆரம்பத்தில் எ அல்லது ஏ வருமிடத்து அதன் அடையாளமான கொக்கி, அதை அடுத்த கோடு கீழ்ப் போக்குள்ளதாயின் அக் கோட்டின் வலது புறத்திலும், கோடு முற் போக்குள்ளதாயின் கோட்டின் மேற் புறத்திலும் சேர்க்கப்படும்.

உதாரணங்கள் :—

ஆகி எகி அது எது அவன் எவன்

அறி எறி

ஓர் சொல்லின் இறுதியில் ஏ வருமிடத்து கொக்கி, அதன் முன்னுள்ள கோடு கீழ்ப் போக்குடையதாயின் அக் கோட்டின் இடது புறத்திலும், கோடு முற் போக்

குள்ளதாயின் கோட்டின் கீழ்ப் புறத்திலும் சேர்க்கப்படும்.

உதாரணங்கள் :—

உருபு உருபே உள உள்ளே காய காயே

இரண்டு கோடுகளுக்கிடையே வருங் கொக்கி முகற் கோட்டுடன் சேர்க்கப்படும். மேலே ஈற்றுக் கொக்கியைப் பற்றிச் சொன்ன முறைப் படிதான் இடைக் கொக்கியும் எழுதப்படும். இடைக் கொக்கியின் அமைப்பிடம் மாறுவது கிடையாது.

உதாரணங்கள் :—

கேள் பெரிய அள்ளேல் வேலி வேக தேள்

தேர் தேய் ரேவதி

மேலுள்ள உதாரணக் குறிப்புகளில் முதல் நான்கில் கொக்கி அமைந்திருக்கும் விதத்தைக் கவனிக்க. அவ் விடங்களில் கொக்கியை முற்றிலும் எழுதுவது இயலாதாகையால், அது ஒரு கவை போல் எழுதப் படுகிறது.

ஔ ஃ

இவ் விரண்டு உயிர்களும் நமது பாஷையில் மிகச் சிறிதளவே உபயோக மாகின்றன. ஆய்த வெழுத்து உபயோகத்தில் இல்லையென்றே சொல்லலாம். ஆகை யால் அது ஒழிக்கப் படலாம். வேண்டுமாயின் அது க் கோட்டால் குறிக்கப் படலாம். ஔ என்ற வோசை அ வ் என்றவைகளின் சேர்க்கை; ஆகையால் அது அவ் எனக் குறிக்கப் படும்.

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக :—

எல்லா, எலி, எல்லூர், எருது, எதில், எதை, எதுவோ, எய்தி, எளியவர், எளிது, எவள், எவை, எகிப்து, ஏலாத, ஏறியே, ஏறுத, ஏர்க்கால், ஏற்பது, ஏறுவது, ஏது, ஏதாவது, ஏதோ, ஏகுக, ஏதோ வொரு, ஏய, ஏவி, ஏவல், ஏகோபி, ஏகார், ஏப்ரல், கேது, கெய்க்வார், கேல்கார், கேள்வி, பெரிது, பேதை, பெய்ய, பேர், வேதியர், வேலை, வேள்வி, வேகாது, கதிர் வேல், வேருடன், வேறு, வேறோர், வெறி, வெல்வது, வெயில், வெளி, தெரிதல், தெளிவு, தெற்கு, தெரு, தேறுது, தேதி, தேய், தேவு, தேவராயர், தேவை, லேபெல், ரேகை, அரேபியா, ரெயில், ரேக்ளா, பலே, தரேல், பதரே, வருதலே, இல்லையேல்,

அதே, தாயே, கிளியே, கொள்ளேல், அவர்களே, இதுவே, பாகே, விதியே, எளிதே, வலிதே, ஆளே, கௌதாரி, கௌதில்யர், பௌத்திரர், ரௌத்திரி, லௌகிகர், வௌவால், வௌவுதல், அஃது, இஃது, எஃகு, பஃறிரை.

கூட்டுயிர்கள்

இரண்டாம் பாடத்தில் ஆசிய. உடைய என்ற சொற்களுக்குக் கற்ற குறிப்புகளை ஞாபகப் படுத்திக் கொள்க. முதலில் பெரிய சுழி அல்லது நீளச் சுழியை எழுதி, பின்னர் அதனுள்ளே சிறிய சுழியை எழுதினோம். அதுபோல் இரண்டு உயிர்க் குறிகளை பின்னும் பலவகைகளில் இணைக்கலாம். கீழுள்ள உதாரணங்களைப் பார்க்க.

அதையே அதிலேயே தாயே ஆகவே உடனே ஆவதை



போயே ஆவதே இருப்பாரோ



ஆவரே போவாரே போவாயே

சில விடங்களில் இரண்டு உயிர்க்குறிகளை இணைப் பது இபலாது. அவ்விடங்களில் சொல்லின் அமைப்புப் படியே இரண்டு உயிர்க்குறிகளும் இடையே யுள்ள மெய்யின் குறியா லிணைக்கப் படும்.

உதாரணங்கள் :—



அதையோ ஆகியவர் போவாரோ



இருப்பவரை ஆகவா போகவா

ஆவதோ, அதிலேயா என்ற பதங்களைக் குறிக் கையில், கடைசியில் எழுதப் படவேண்டிய பெரிய சுழிக்குப் பதிலாகச் சிறிய சுழி உபயோகிக்கப் பட்டு, குறிப்புகள் கீழ் காட்டப் பட்டவாறு எழுதப்படும்.



ஆவதோ அதிலேயோ

தள்ளப்படுங் குறிகள்

சொற்களி னீற்றில் வரும் வே, யே என்ற வோசைகள் ஏ என்றே கொள்ளப் படுவதால் அவைக ளின் வ், ய் எழுதப் படுவதில்லை.

தனித்த வுயிர்கள்

தனித் தெழுதப் படும் பொழுது பெரிய வட்டச் சுழி ஆ என்ற சொல்லையும், நீளச் சுழி உடன் என்ற சொல்லையும் குறிக்கு மென்று அறிவீர்கள். புள்ளி, சிறிய சுழி, கொக்கி—இவைகளும் தனிச் சொற் குறிப் புகளாகும். அந்த, இந்த, எந்த என்ற சொற்கள் அ-, இ-, எ-, எனக் குறுகி வேறு சொற்களுடன் கலக்கின்றன. அவ் வேலை, இத் தலைவர், எப் பயிர் என்ற சொற்களின் அ, இ, எ பிந்திய சொல்லின் குறிப்போடு சேராது தனித் தெழுதப் படும். ஆனல், அடிக்கடி உபயோகமாகுஞ் சொற்களின் முன் அ, இ, எ வருமாயின் இவ்வுயிர்கள் அச் சொற்களுடன் சேர்த் தெழுதப் படலாம். கீழ் கொடுக்கப் பட்டுள்ள தனிக் குறிச் சொற்களைப் பார்க்க.

தனிக் குறிச் சொற்கள்

- இந்த, இ
- அந்த, அ
- என, என்று, என்ற
- என்ன
- எந்த, எ
- ஏ, ஏன்
- எல்லாம், எல்லா
- ஆ, ஓ
- இல்லையே, அல்லவே

- அப்பால்
- எவ்வாறு
- இக்காரியம்
- எது
- எவ்வளவு
- எப்படி
- எவர்
- அப்படி
- இப்படி

தனிக் குறிச் சொற்கள்

(தொடர்ச்சி)

இப்பால்

எவை

எப்பொழுது

அப்பொழுது

இப்பொழுது

எப்போது

அப்போது

இப்போது

 அவ்வாறு

இவ்வாறு

ஐக்கியக் குறிப்புகள்

ஆஹா, ஓஹோ, ஒவ்வொரு என்ற இரட்டித்த சொற்களைக் குறிக்க, முதற் சொல்லின் குறிப்பை யெழுதி, அதன் கீழ் ஓர் சிறு கோடு போடப்படும்.

கீழுள்ள உதாரணங்களைப் பார்க்க.

ஆஹா, ஓஹோ

 ஒவ்வொரு

பரபரப்பு

 ஆரவாரம்

 யாரார்

போகப் போக

 தலைக்குத் தலை

 துளித் துளியாய்

 அவரவர்

 எதேது

வரவர

அவ்வப் பொழுது

 வாராவாரம்

பற்பல

வெவ்வேறு

செய்யச் செய்ய

வேறு சில விசேஷ ஐக்கியக் குறிப்புகளும் கீழ் காணப்படும்.

எறக்குறைய

 எந்தச் செலவு

இவையெல்லாம்

வருவதெல்லாம்

 அவர்களெல்லோரும்

 அதெல்லாம்

என்ன செய்ய

என்றிருக்க

 என் இல்லை

எந்தக் காரியம்

உருபு, விகுதிகள்

குறிப்புகளி னிற்றில் கொக்கி, பக்கம் மாற்றி எழுதப் பட்டால் அது **-என்** என்பதைக் குறிக்கும,

-ார், -ார்கள் என்றவற்றோடு **-ஆ, -எ, -ஓ** சேரின், சொற் குறிப்பின் வலது புறம் தனித் தெழு

தப் படும் புள்ளிக்குப் பதிலாக பெரிய சுழி, அல்லது நுனிகள் கீழாயுள்ள கொக்கி வரையப் படும்.

மேலே கூட்டுயிர்ப் பகுதியில் வேறு சில உருபுகள் உரைக்கப் பட்டுள்ளன.

இப் போதனைகளின்படி கீழமைக்கப் பட்டிருக்கும் பதக் குறிப்புகளைக் கற்க.

	செய்தீர்களா		செய்தேன்
	செய்வீரோ		செய்வேனா
	செய்கிறீர்களே		செய்வாரா
	செய்தாயா		செய்தவரை
	செய்வதை, செய்வதா		செய்தாரை
	செய்கிறேன்		செய்யேல்

 செய்தே

செய்கிறதை

 செய்தலே

செய்வாரை

செய்வதிலேயே

செய்ததையோ

செய்தவரோ

செய்தேனே

 செய்கிறதிலே [யா

செய்தவரில்

குறிப்புகளி னிறுதியில் பக்கம் மாற்றிப் போடப் படும் சிறு சுழி, **-வர்** என்றதைத் தவிர **-யர்**, **-வன்**, **-யன்**, என்றவைகளையும் குறிக்கும்.

ஈற்றில் **க்** கோடும் பக்கம் மாறிய பெரிய சுழியும் சேர்ந்து **-காரர்** என்றதைக் குறிக்கும்.

உதாரணங்கள் :

ஆகிறவன்

வாலிபன்

ஐரோப்பியர்

வெள்ளைக்காரர்

வேலை

மேலே ஆங்காங்கு கொடுக்கப் பட்டிருக்கிற குறிப்புகளைச் சில முறை பார்த்தெழுதி, மனதிற் கொண்டு, பின் வரும் சொற்களுக்குக் குறிப்புகள் எழுதுக.

லேவா தேவி, அவையே, அவையோ, செய்வாரே, செய்தாரை, செய்தவுடனே, வேலைக்காரர், காவற்காரன், இதாலியர், கொள்ளைக் காரர், அரேபியர், ஆபிரிகாக்காரர், உடையவன், செய்வதையே, செய்வதே, இருப்பாயோ, தருவாயே, இருக்கவே, இருக்கவோ, வருவாரை, தருபவரை, செய்வாயே, செய்ததையா, போகிறவன், அவ்வேளை, ஒருகால், அல்லவோ, ஏனென்று, என்னவென்று, செய்ததெல்லாம், அப்பொழுதே, இப்படியே, எதுவோ, எல்லாமே, போவேன், அதற்கேன், இருப்பேன், செய்தேனே, வருவீரே, செய்கிறீர்களா, செய்கிறாயா, இருப்பவன், பூர்விகர்.

வாக்கியங்கள்

முந்திய பாடங்களில் வாக்கியங்கள் வரிக்கொன்றாக எழுதப் பட்டன. அவைகள் சிறியவை. பல பெரிய வாக்கியங்களை எழுதுவதில் அம் முறை ஒவ்வாது; வாக்கியங்களின் பிரிவு வேறு வகையால் காட்டப்பட வேண்டும். **விரி** வெழுத்தில், வாக்கிய முற்று ஓர் புள்ளியாற் குறிக்கப் படுகிறது. குறிப் பெழுத்தில் புள்ளியும் ஓர் சொற் குறிப்பாவதால், அதை முடிவடையாளமாய்க் கொள்ளலாகாது.

ஓர் வரியின் முதற் பாதிக்குள் ஓர் வாக்கியம் முடிந்து விட்டால், அவ் வரியிலேயே அடுத்த வாக்கியம் சற்று தூரத்தில் ஆரம்பிக்கப் படலாம். வரியின் முடிவில் வாக்கியம் முடியின், அடுத்த வரியில் சற்று உள்ளடக்கி அடுத்த வாக்கியம் எழுதப் படவேண்டும்.

வேலை

கீழுள்ள வாக்கியக் குறிப்புகளைப் பார்த் தெழுதுக :—

எளியோருக்கு உதவி செய்.

அதற்குப்பிறகு செய்யப்போகிற காரியம் எது?



அவ்வப் போதுள்ள விலையை அறிகிறீர்களா?



அவன் பெயர் என்ன வென்று கேள்.

அவ் வீதி தவிர வேறோர் பாதை உளது.

———

கீழுள்ள வாக்கியங்களைக் குறிப்பெழுத்து முறையில் எழுதுக:—

அவ் வூர்களில் காவேரி ஆறு பாய்கிறது.
ஓகோ, அவன் செய்த வேலை வெளியாகியதா?
அந்தப் பெரியோர் என் வரவில்லை?
அதுவோ இதுவோ என ஐயுறுகிறாள்.
பெரிய வியாபாரிகளிற் பலர் ஐரோபியராவா.
வெயில் வருகையில் இருள் போகிறது.
எந்த ரெயிலில் ஏறி வருவீர்?
தலைவருடைய கேள்விக்கு யார் பதில் உரைத்தார்?
இது வோர் வீரனுடைய செயலா?
இப்பொழுது எவ் வியாதியாவது வருகிறதா?
அவ் வேலை, செய்யச் செய்ய எளிதாகிறது.

நான்காம் பாடம்.

நேர் கோடுகளாற் குறிக்கப்படும் மெய் யோசைகள் முந்திய பாடங்களிற் சொல்லப் பட்டன. மற்ற மெய்கள் வளைவு கோடுகளாற் குறிக்கப்படும். அவைகளிற் சிலவற்றை இங்கு கவனிப்போம்.

ம் ட் ச் ங், ன்

இவை நான்கும் மெல்லிய, சிறிய, வளைவு கோடுகள்.

ம், ங் கோடுகள் நேர் கீழாக வரியை வந்து தொடும் படியும், ட், ச் கோடுகள் படுக்கையாய் வரியிற் றங்குமாறும் எழுதப்பட் டிருப்பதைப் பார்க்க. தனித்து வரையப்படும் பொழுது இவைகள் இவ்வாறே அமைய வேண்டும்.

ம், ங் கோடுகள் கீழ்ப் போக்காயும், ட், ச் கோடுகள் முற் போக்காயும் எழுதப்படும்.

குறிகளைச் சேர்க்கும் முறை

முதலில் உயிர்க் குறியும், அடுத்தாற்போல் வளைவு கோடும் வருகையில், உயிர்க்குறி வளைவு கோட்டின் உட்புறத்தில் வைக்கப்படும்.

வளைவு கோட்டை அடுத்தாற் போல் ஓர் உயிர்க் குறி வரின், அதுவும் வளைவின் உட்புறத்திலேயே வைக்கப் படும். அதன் பின் வரும் மெய்க்குறி அவ் வுயிர்க் குறி முடியுமிடத்தே ஆரம்பிக்கப் படும்.

ஓர் நேர் கோடும் அதன் பின் ஓர் வளைவு கோடும், இடையே ஒருயிர்க் குறியுடன் சேர்க்கப் படுவதில், அவ் வுயிர்க் குறியானது, கொக்கி அல்லது நீளச் சுழியாயின், அதன் முன்னுள்ள நேர் கோட்டுடன் இறுதிக் குறிக்காய பக்கத்தில் சேர்த் தெழுதப் படும். அவ் வுயிர்க்குறி ஓர் வட்டச் சுழியாயின், அதன் பின்னுள்ள வளைவு கோட்டி னுட்புறம் அமையுமாறு எழுதப் படும்.

இரண்டு வளைவு கோடுகளுக் கிடையே வரும் உயிர்க்குறி முதல் வளைவினுடன் சேர்த் தெழுதப் படும்.

இப் போதனைகள் கீழே காணும் உதாரணக் குறிப்புகளால் நன்கு விளங்கும்.

ஆமோ எமை மேல் இமை ஏசு சேவல்

எடு அனேக நுகர் முடி மேடு மாசு

மான் முன் சேனை சுடு செடி நெடு



நும் நேசி கொடேம் விடான் விடேன் விடு



கேடு வெடி துடி கும்பல் பூமி செல்லும்



பேசு பாசி வாசி தூசி கூனல் வேனில்



தேன் தான் சுபம் சூது முதல் கடல்

தொடேல் கெல் நில் நெய் நாகர் நபர்

வேலை

மேலுள்ள உதாரணக் குறிப்புகளை சில தடவை பார்த்தெழுதி அதன் பின் கீழ்க்காணும் சொற்களுக்குக் குறிப்புகள் வரைக.

உமி, முதிர், ஊசி, ஆசை, சுகர், சேர், ஆடி, இடை, அடே, நுவல், எறுதி, நூல், உளது, மழதை, மாடு, மேசை, மேனகை, சசி, சமை, சுமை, சேமி, சான்று, சுனை, சாடி, நன்று, நாடு, நுட்ப, நாம், நேமி, நாசி, சேதி, ஆடும், அடம், காடாம், கடன், கடைசி, வாடி, தேடி, கெம்பு, போமோ, உதவும், உதவேம், தேமல், தூமி, செல்லேம், கூசு, கேசம், ருசி, பேறு, வானம், சேகரி, சுலபம், சேவை, சேதம், சாய், மூவர், மேகலை, கடுகு, நொய், பூனை, கூடூர், ரேடியோ.

ச் ஸ் ட் ஷ், ழ் ள் ண்

மேலுள்ள சித்திரத்தில் மூன்று புதிய மெய்க் குறிகள் இருப்பதைப் பார்க்க. ஒன்று **ஸ்** ஐயும், மற்றொன்று **ஷ்** அல்லது **ழ்** ஐயும் மூன்றாவது **ண்** ஐயும் குறிக்கும். இம் மூன்றும் வளைவு கோடுகளே. இப் புதிய குறிகளோடு சிறிது ஒக்கும் பழைய குறிகளும் அவைகளி னருகே காட்டப்பட் டிருக்கின்றன.

ஸ், ச் என்ற வோசைகள் ஒன்றுக் கொன்று அதிகமாய் வேறுபடாதது போலவே அவைகளின் குறிகளும் அதிகமாய் வித்தியாசப்படா தமைந்திருப்பதைக் காண்க. இரண்டும் ஓரளவுள்ள மெல்லிய வளைவு கோடுகள். **ச்** கோடு படுத்த வசம், **ஸ்** கோடு சிறிது மேனோக்கியது ; வித்தியாசம் அவ்வளவே.

ஷ் ஓசை **ட்** ஓசையை ஒக்கும் ; அது தனித் தமிழில் **ட்** என்றே எழுதவும் படுகிறது. அவ் வொற்றுமை குறிப்புகளிலும் இருப்பதைக் காண்க. **ட்** கோடு படுக்கையாய அமைந்திருக்க, ஷ் கோடு சிறிது கீழ் நோக்கி எழுதப் படுகிறது. அதைத் தவிர இரண்டிற்கும் வேற்றுமை கிடையாது.

ஷ் ன் குறி ழ் க்கும் குறியாகும்.

ண் ஓசையைக் காட்டும் குறி, ழ் ஓசையின் குறியைச் சிறிது ஒத்திருப்பதையும் பார்க்க. இரண்டும்

சற்று கீழ் நோக்கியும் முற் போக்காயுமே வரையப் படுகின்றன. ஒன்றுக்கு வளைவு இடது புறம், மற்றொன்றுக்கு வளைவு வலது புறம்; அதுதான் வித்தியாசம்.

ழ், ள், ண் என்ற வோசைகள் ஒன்றையொன்று சிறிது ஒத்திருப்பது போலவே, அவைகளின் அடையாளக் குறிகளும் நீளம் போக்குகளில் ஒத்திருப்பதைக் காண்க.

இப்பாட ஆரம்பத்தில் கற்பிக்கப் பட்ட நான்கு வளைவு கோடுகளைச் சொற் குறிப்புகளில் சேர்க்கும் முறை முன்னே சொல்லப் பட்டது. அதன் பின் கற்பிக்கப் பட்டுள்ள ஸ், ஷ், ண் வளைவு கோடுகளும் அம்முறைப் படியேதான் சேர்க்கப்படும். கீழுள்ள உதாரணங்களைப் பார்க்க.

ஸபை ஸ்திதி வஸதி கிஸ்தி புஷ்டி கோஷா



தாஷி எழு மாண்பு சோணல்

ஜ் ஹ் க்ஷ

ஜ் என்னும் ஓசைக் கோட்டாலும் ஹ் ஓசைக் கோட்டாலும் குறிக்கப்படும். ஓர் சொல்லின் ஆரம்பத்தில் வரும் ஹ் ஒழிக்கப்படலாம்.

க்ஷ என்பது ஓர் கூட்டோசை. அதை க் ஷ் என்று, அல்லது ட் ச் என்று பிரிக்கலாம்.

க்ஷ் ட்ச் ஷ்ட் ச்ட்

க்ஷ என்றதை ட்ச் என்றும், ஷ்ட் என்றதை ச்ட் என்றும் கொண்டு அவைகளை மேலுள்ள சித்திரத்தில் காட்டியவாறு குறிக்கலாம்.

வேலை

கீழுள்ள பதங்களுக்குக் குறிப்புகள் வரைக :----

ஸஹா, ஸகல, வைஸ்ராய், விஸ்தரி, ஸேவை, ஸெடில்மெண்டு, ராஜா, ராஜ்யம், ஜாகை, ஜூரி, ஜாக்கிரதை, ஜயம், ரஜா, ராஜிநாமா, மாஜி, ஜெயில், ஜீவனம், ஜயம், ஜூலை, க்ருஹம், க்ராஹ்யம், ஹரி, ஹால், ஹாரம், ஹிபரிங்(ன்)கு, ஹீனம், ஹேஷ்யம், பாஷ்யம், விஷம், விஷபம், இஷ்டம், கஷ்டம், நஷ்டம், துஷ்டன், கோஷம், ஔஷதம், போஷகன், உஷ்ணம், மழை, வழி, வாழ்வு, தாழ்வு, ஒழிவு, கிழவர், ஊழல், பணிவு, துணிவு, பண்பு, பண்டை, மணல், சணல், அண்மை, கருணை, கக்ஷி, சாக்ஷி, மாக்ஷிமை, லக்ஷம், லக்ஷியம், லக்ஷணம், அக்ஷரம், ஆக்ஷி, அபேக்ஷகர், தாக்ஷண்யம், ரக்ஷணை, பக்ஷி.

———

தனிக் குறிச் சொற்கள்

கீழ்க் காணும் ஒடுங்கிய சொற் குறிப்புகளை, பல முறை பார்த்தெழுதி மனதிற் கொள்க.

கக்ஷி

முதல், முதலிய

மிக

மகா

இடம், இடத்து

இடத்தில்

நீ, நீர்

நீங்கள்

ஒன்று

சிறிது, சிறிய

ஜனங்கள்

பெரிது, பெரிய

சில

பல

தனிக் குறிச் சொற்கள்

(தொடர்ச்சி.)

சுமார்

சுலபம்

சமயம்

கழித்து, விஷயம்

ஒழிய

 அவ்விஷயம்

எவ்விஷயம்

இஷ்டம்

உண்டு, உண்மை

உள்ளது, உள்ள

எண்ணு, எண்ணி

ஆன, ஆனது

என்பது, என்பவர்

ஸபை

ஐக்கியக் குறிப்புகள்

முன்னைய பாடங்களொவ்வொன்றிலும் சில ஐக்கியக் குறிப்புகள் கொடுக்கப் பட்டன. அவ்வாறே இப் பாடத்திலும் சில ஐக்கியக் குறிப்புகள் இதனடியில் கொடுக்கப் பட்டுள்ளன. இவைகளையும் முன்னே கற்பிக்கப்பட்டவைகளையும் நன்றாய் வாசித்தறிந்து, அதன் பின் அவைகளை சிலமுறை பார்த்தெழுதி மனதிற் கொண்டு, அவைகளைப் போல் பாஷையில் அடிக்கடி சேர்ந்து வரும் வேறு சாதாரணச் சொற்களுக்கும் ஐக்கியக் குறிப்புகளைத் தயாரிக்க.

முதலியவெல்லாம் ஆனபோது

மிகப்பெரிது  ஆனபடியால்

 இவரிடத்தில் சபைத்தலைவர்

ஒன்றுபோல சுலபமல்ல

செய்வதுண்டு  ஜனங்களுடைய

ஐக்கியக் குறிப்புகள்

(தொடர்ச்சி.)

ஒவ்வொன்றாய்

அடிக்கடி

படிப்படியாய்

ஆமாம்

ஒன்றுக்கொன்று

நாளுக்கு நாள்

மேன் மேலும்

சிற்சில

மேலுங் கீழும்

லாப நஷ்டம்

உருபு, விகுதிகள்

முந்திய பாடங்களிற் கூறப்பட்ட உருபு, விகுதி களைத் தவிர பின்னும் சில உருபு, விகுதிகளுக்கு அடையாளங்களும், அவைகளைச் சொற் குறிப்புகளுடன்

இணைக்கும் முறையும் கீழுள்ள குறிப்புகளிற் காணப் படும்.

-ஆமல் -ஆமே, என்றவை -ஆம் என்று குறிக்கப்படும்.

ஒடு, படு, விடு, இடு என்றவைகளின் ஈற்று உ தள்ளப் படும்.

கண்டு, கொண்டு என்றவைகளின் டு விடப் படும்.

 செய்தவரிடம்

 செய்தவரிடத் [தில்

 செய்தவரோடு

செய்ததுண்டு

 செய்து [கொண்டு

 செய்தது கண்டு

 செய்திடு

செய்த [இடம்

 செய்யப் [படுகிறது

செய்யாமை [யால

 செய்ததைக் [கொண்டு

செய்தது [முதல்

 செய்துவிடு

செய்து [விடுவது

— செய்தமை — செய்யாமலே

— செய்யாமை — செய்கிறோம்

— செய்யாமல், செய்யாமே — செய்தோம்

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் எழுதுக:—

ஆன, ஆனார், ஆனால், ஆனோம், ஆவோம், ஆனது, போன, போனான், போனால், போனோம், போவோம், போனது, சொன்ன, சொன்னேன், சொல்லுவது, சொல்லிய, சொல்லுகிறார்கள், செய்தோம், இருக்கிறோம், வருவோம், வருகிறவரிடத்தில், அதுகண்டு, இதைக் கொண்டு, போய் விடுவது, முதலியவை, மிகச் சிறிய, மகாத்மா, நீங்களெல்லாரும், ஜனங்களுடைய, ஜனங்களிடம், மகா ஜனங்களில், எழுதுகிறீர்களா, பேசுகிறாய், வாசித்தான், படிக்கிறார்கள், கூறுபவரோடு, முதலாவது, போன்றது,

என்றவை, உண்மையானால், ஒன்றுகூட, சிறிது அளவு, காரியதரிசி, சிலநாட் கழித்து, கக்ஷிக்காரர், நல்லசமயம், சுலபமானால், இஷ்டப்படி, எவ்விடத்தில், ஜன(ங்கள்)சபை, சொல்வதுண்டு, தள்ளப்படுவது, தாளாமை, பேசாமலே, தீராமையால், எண்ணிக்கொண்டிருப்பார்கள்.

வாக்கியங்கள்

வேலை

கீழுள்ள வாக்கியக் குறிப்புகளைப் பார்த்தெழுதுக:—



தமிழ் பாஷை மிக அருமை உடையது



சிறுவர்கள் ராஜீய விஷயங்களில் தலை யிடலாமா?



மழை இல்லாததால் ஜனங்கள் கஷ்டம் அடைகிறார்கள்



மைசூர் மகாராஜா நாளை விஜயம் செய்வர்

அந்த ரஸ்தாவைச் சீர் செய்ய சுமார் லட்ச

ரூபாய் செலவு ஆகும்

கீழுள்ள வாக்கியங்களைக் குறிப்பெழுத்து முறையில் எழுதி, பின்னர் அவைகளை வாசிக்க.

மதராஸ் நகர சபைத்தலைவர் மேயர் எனக் கூறப்படுவர்.

இவ்வருஷம் சில ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தல் உண்டாம்.

அந்தக் கேஸில் சாக்ஷி விசாரணை முடியவில்லை.

ஒரு ஸ்தானத்திற்கு எழு அபேக்ஷகர்கள் நிற்கிறார்கள்.

லாப நஷ்டம் என்பது வருஷ முடிவில் தான் காணக் கூடும்.

பழியா வருவது மொழியாது ஒழிவது.

மாகாண சுப ஆட்சி முதலில் ஏற்படப் போகிறது.

மிதவாதக் கக்ஷி என்று ஒன்று உள்ளது.

தொழில் கல்வி, கிராம சுகாதாரம் முதலிய விஷயங்களை நீங்கள் அலக்ஷியம் செய்து விடுகிறீர்கள்.

ஸார்தா மசோதா நிறைவேறியது முதல் சிறுவர்களுக்கு விவாகம் நடப்பதில்லை என்றே சொல்லலாம்.

———

ஐந்தாம் பாடம்.

நமது பாஷையில் உபயோகமாகிற ஓசைகளில் இரண்டு தவிர மற்ற யாவும் முந்திய பாடங்களிற் கற்பிக்கப்பட்டுள்ளன. பாக்கியாய் நிற்கும் அவ்விரண்டு ஓசைகளையும் இப்பாடத்திற் கவனிப்போம்,

ஞ் என்ற ஓசை ந் எனப் பாவிக்கப் படலாம். ஞேயம் என்ற சொல் நேயம் என்றும் ஆக்ஞை என்ற சொல் ஆக்கினை என்றும் எழுதப் படுகின்றன வல்லவா?

ங் என்ற ஓசை ம் என்று கொள்ளப் படலாம். அங்கம் என்ற பதம் அம்கம் என்று குறிக்கப்படும். அது வடமொழியில் அவ்வாறே எழுதவும் படுகிறது. ங் என்ற உயிரேறிய மெய் க என்று குறிக்கப் படும். ங் சார்புகளில் வேறெதுவும் உபயோக மாவதில்லை. ஙவும், அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்ற சொற்களில் மட்டுமே உபயோகப் படுகிறது.

———

பலசொற்கள் -அம் என்று முடிகின்றன. தேசம், **காலம், மானம்** என்றவை உதாரணங்களாகும். **அம்** என்ற இரண்டு ஓசைகளும் சேர்ந்து ஒரே அடையாளத்தாற் குறிக்கப்படும். கீழிருந்து மேலாக முற்போக்குடன் எழுதப்படும் ஓர் சிறிய வளைவு கோடே இதன் குறியாகும். அக்குறி இதனடியிற் காணப்படும்.

அம் அம்

இக் குறி மேற் காட்டியிருப்பது போல், ஒருவகை அல்லது மற்றொரு வகையாய் எழுதப் படலாம். இவ் வளைவு கோடு நான்காம் பாடத்திற் கூறப்பட்ட வளைவு கோடுகளை விட நீளத்திற் மிகச் சிறியது. அவைகளை விட அதிகமாய் வளைந்துள்ளது. இது ஓர் கிளியின் அலகை ஒத்திருக்கின்றது.

இவ் வலகு ஓர் மெய்க் கோட்டின் பின் வருமிடத்து, அக் கோட்டோடு கலக்காமல் வேறு போக்குடன் எழுதப்பட வேண்டும்.

முதலில் காட்டப் பட்ட அம் குறி அவ்வாறு சேராத விடங்களில் அதற்குப் பதிலாக இரண்டாவது

அம் குறி உபயோகப் படுத்தப் படும். கீழுள்ள உதார ணங்களைப் பார்க்க :—

தேசம் காலம் குளம் நயம் தாகம் தாபம்

தனம் சமம் இடம் வாஸம் தோஷம் பணம்

———

இவ்வலகு சொற்களினீற்றில் மட்டுமன்றி முதலிலும் இடையிலுங் கூட உபயோகிக்கப் படும். **ங்க், ஞ்ச், ண்ட், ந்த், ம்ப், ன்ற்** என்ற சேர்க்கைகளில், முதலாயுள்ள மெல்லிய ஒற்றெழுத் தோசை ம் என பாவிக்கப் பட்டு, அதன் முன் அ இருப்பின், **அங், அஞ், அண், அந், அம், அன்** என்றவை இவ்வலகா லேயே குறிக்கப் படலாம். உதாரணங்கள் கீழுள.



அங்கு அஞ்சு அண்டு அந்து அம்பு அன்று

இக் குறிப்புகளிலும் அலகு, சிலவற்றில் ஓர் வகை யாயும் மற்றவைகளில் மற்றோர் வகை யாயும் எழுதப்பட்

டிருப்பதைக் காண்க. அலகு, சொல் முதலில் வருமிடத்து, அது அடுத்த குறியோடு கலக்காது கூர்மையாய்ச் சேரவேண்டும். ஜோடியின் ஓர் அலகு அவ்வாறு சேராதாயின், மற்றைய அலகு உபயோகிக்கப் படவேண்டும்.

இரண்டு கோடுகளி னிடையே வரும் அலகு அதன் முன்னுள்ள கோட்டுடன் இம் முறைப்படி சேர வேண்டும். கீழுள்ள உதாரணங்களைப் பார்க்க.

தங்கம் லண்டன் வஞ்சம் மந்தை நம்பு கடந்து



சண்டை குழந்தை மணங்கு ஸங்கதி பஞ்சம் கன்று

———

இவ் வலகு சொற்களி னீற்றில் **-அன்** என்றதையும் குறிக்கும். உதாரணங்கள்:—



கடன் அதன் பயன் ராமன்

-அன் என்ற உருபு, பக்கம் மாறிய சிறு சுழியாற் குறிக்கப் படலாமென்று மூன்றும் பாடத்திற் கூறப் பட்டது வினைப் பெயர்களுக்கு மாத்திரமே. மற்ற விடங்களில் **-அன்**, அலகாற் குறிக்கப் படும்.

அம் அலகு, மேலிருந்து கீழாகவும் பிற்போக்காக வும் எழுதப்படின் **அது உம்** அல்லது **இன்** என்ற வோசையைக் குறிக்கும். கீழுள்ள உதாரணங்களைப் பார்க்க:—



தும்பி எறும்பு அவிந்த குண்டு பிஞ்சு முந்தி



நின்று கண்ட படிந்து அழிந்த அணிந்த விந்து

தகும் போலும் தாமும் காசும் வரின் செய்யின்



காணின் சேளூம் உப்டர் இந்தியா உமிழ் இஞ்சி

இன்மை



எம், ஓம்

மேலிருந்து கீழாகவும் முற்போக்காகவும் எழுதப் படும் அலகு **எம், ஓம், என், ஓன்** என்ற வோசைகளைக் குறிக்கும். இவைகளைக் கொண்டு சில சொற் குறிப்புகள் வரைவோம்.

எங்கே என்பது எங்களை என்றும் எஞ்சிய ஒண்டி

கொஞ்சம் பெண்டிர் சொந்தம் மென்மை நொந்து

செஞ்சி

வேலை

கீழுள்ள பதங்களுக்குக் குறிப்புகள் வரைக :---

நிலம், கிராமம், தருமம், ஸ்தலம், நியாயம், வந்த, தந்த, புதன், ஞாயிறு, சங்கம், பஞ்சம், மஞ்சள், நன்றாய், வென்ற, மந்திரி, தஞ்சாவூர், ஐயங்கார், மெம்பர், நம்பாமல், வண்டி, தம்பி, சம்பளம், கம்பீரம், மாகாணம், தகுந்த, முடிந்த, நெருங்கி, சுருங்க, செல்வம், தானியம், பஞ்சாப், பூகம்பம், நெஞ்சு, ஸந்ததி, தைரியம், சுதந்திரம், பெண்டிர், கஞ்சம், திண்டிவனம், சென்ற, செம்பு, கண்டேன், அந்தரங்கம், தொந்திரவு, தந்திரம், சிந்தூரம், சந்தோஷம், சந்தேகம், சண்டை, கொன்று, தின்ற, இடிந்து, நடந்து, திங்கள், ஸ்வராஜ்யம், பார்லிமெண்டு, பம்பாய், குளம், எங்ஙனம், அபிமானம், எஞ்சினீர், குவிந்த, முந்தியது, செந்தமிழ், கழிந்து, போகும். ஆயின், கிண்டி, துண்டம், விந்தை.

———

தனிக் குறிச் சொற்கள்

கீழ்க் கொடுக்கப் பட்டுள்ள ஒடுங்கிய சொற் குறிப்புகளை, பல முறை பார்த்தெழுதியும் வாசித்தும் மனதிற் கொள்க.

	(மேலாக) தன், தம்		என்
	(கீழாக) உன், உம்		எம்
	நம், நாம், நாங்		வரையிலும்
	தான், தாம்		வேணும், வேண்டும்
	ஆயின்		எனின், என்னும்
	இன்னும்		வேண்டாம்
	இன்று		ஆனாலும்
	இனிமேல்		ஒன்றும், என்றும்
	அனேகம்		இங்கு
	தின்று		உனக்கு
	இருந்து		கொஞ்சம்

ஐக்கியக் குறிப்புகள்

இதன் கீழ் சில ஐக்கியக் குறிப்புகள் காட்டப் பட்டிருக்கின்றன. அவைகளைச் சில முறை பார்த்தெழுதுக.

	நான்தான்		இல்லையென்றாலும்
	நீதான், நீர்தாம்		இன்றியமையாத
	முன்பின்		ஒன்றுமில்லை
	எப்பொழுதும்		ஆனபோதிலும்
	அரும்பெரும்		கூடுமாயின்
	ஒருவரிடத்திலும்		முடிந்தவரைக்கும்

இந் நூலின் ஒவ்வோர் பாடத்திலும் கற்பிக்கப் பட்ட சொற் குறிப்புகளைக் கொண்டு, பல ஐக்கியக் குறிப்புகளைச் சிரமமின்றித் தயாரிக்கலா மென்றும், அவைகளிற் சிலவற்றை மாத்திரம் ஆங்காங்கு உதாரணங்களாகக் காட்டி யிருக்கிறோ மென்றும் அறிவீர்கள். எவ் வகைச் சொற்களில் குறிப்புகளை ஐக்கியப் படுத்தலா மென்றும், அவ் வேலையை எந்த அளவுடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் முதற் பாடத்தில் கூறப் பட்டது. குறிப் பெழுத்துக் கல்வியில் தேர்ச்சி

பெறுவதற்கு வேண்டிய முக்கிய சாதனங்களில் இது வொன்றாகு மாதலாலும், இது வோர் கடினமல்லாத வேலை யாதலாலும், தினம் சிறிது நேரம் இதற்காகச் செலவிட்டு, சம்பாஷணையிலும் நூல்களிலும் எதிர்ப் படும் பொதுச் சொற்றொகைகளை ஓர் நோட் புஸ்தகத் தில் பதித்து வைத்துப் பின்னர் அவைகளுக்கு ஐக்கியக் குறிப்புகள் எழுதிப் பழகுக.

உருபு, விகுதிகள்

தமிழில் பொதுவாய் உபயோகப் பட்டுவரும் வேற் றுமை உருபுகள் யாவும் கீழ் உள்ள குறிப்புகளில் சேர்க் கப் பட்டிருப்பதைக் காண்க.

நீயும்

நானும்

 எந்தன்

உந்தன்

எங்கள்

தங்களுக்கு

தாமே

உன்னை

என்னோடும்

தன்னிடம்

உனது

எம்மால்

தம்முடன்

எனக்கு

எங்களுடைய

எங்களிடமிருந்து

இதனடியில் செய் என்னும் சொல்லை முன் பாடங்களிற் கூறிய வகைகளைத் தவிர வேறு வகைகளிலும் விகுதி சேர்த்து மாற்றி குறிப்புகள் அமைத்துக் காட்டப் பட்டுள்ளன.



செய்யின், செய்யும்
செய்யினும்
செய்யுங்கள்
செய்யாதேயுங்கள்
செய்கின்றது
செய்தன, செய்தனர்



செய்தனரா
செய்யுமே
செய்தபின்
செய்வதன்முன்
செய்யுமுன்
செய்யவும்

வேலை

மேலே கொடுக்கப் பட்டுள்ள உருபு, விகுதிகளேறிய குறிப்புகளைப் பார்த்தெழுதி, அதன் பின், அடியிலுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் எழுதி வாசிக்க.

வாருங்கள், நிற்காதேயுங்கள், உட்காருமே, பிரஞ்சுக்காரர், அங்குமிங்கும், இருந்தால், செய்கிறதற்குமுன், செயவதனால், கண்டு கொண்டு, கொண்டாடுதல், பேசுகின்றனன்,

ஆகின்றது, நின்றுகொண்டிருந்த, அறிந்தும், தெரிந்திருந்தும், செய்தபோதிலும், என்னுடையது, தமக்குள்ளே, ஒருவரும், எவராயினும், கொஞ்சங்கூட, நமக்குள்ளே, ஒருபோதும், எம்மாலேயே, என்னுடையது, அதுவுமன்றி, ஒரு காரியமு மின்றி, வருமென்றே, இதிலிருந்து, செய்ய வேண்டும், வர வேண்டாம், ஆகுமெனின், ஒன்றும் செய்யாமல், எங்கெங்கேயோ, உன்னைவிட, ஒன்றுமே, கூடாவிடின், முடியுமானால்.

வாக்கியங்கள்

வேலை

கீழுள்ள வாக்கியக் குறிப்புகளைப் பார்த்தெழுதுக:—



இக் கல்விக்கு ஞாபகம் மிக அவசிய மாகும்

தாந்தா முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்



இனிமேல் இங்கு இப்பண்டம் செலவு ஆகுமென்று [தோன்றவில்லை



அடினும் ஆவின் பால் தன் சுவை குன்றாது



எங்களது வேண்டுகோள் அங்கீகாரம் செய்யப் படு [மென்று நம்புகிறோம்

கேட் டெழுதுதல்

குறிப் பெழுத்தை ஜீவனமாகக் கொள்பவர்களின் முக்கிய வேலை பிறர் வாய்ச் சொற்களைக் கேட்டவுடன் அவைகளைப் பதிவதாகும். இக் கல்வியைக் கற்கும் பொழுதே நூலிற் கூறப் பட்டுள்ள எழுத்து வேலையை அம் முறைப்படி வேறொருவர் வாசிக்கக் கேட்டு எழுதிப் பழகுபவர்கள், தொழிலில் சீக்கிரம் முன்னடைகிறார் கள். அவ்வாறு செய்யாதவர்கள் தொழிலிற் புகுந்த பின் சில காலம் கஷ்ட மடைவதோடு, முதலிலேயே

பெறவேண்டிய பிறரின் நன்மதிப்பை இழக்கிறார்கள். ஆகையால் இந்நூலின் அக்ஷரங்களைக் கற்றுள்ள இத் தருணமே, கேட்டெழுதும் பழக்கத்தை மேற் கொள்க.

கேட்டெழுதுவது, முதலிற் சற்று பிரயாசையைக் கொடுக்கும். வார்த்தை வார்த்தையாய் எடுத்து நிதா னத்துடன் வாசிப்பகற்த ஒருவரைப் பழக்கி, தினம் சிறிதுநேரம் அவருடைய உபகாரத்தைப் பெறவேண் டும். நூலைக் கற்பவருடைய திறமை ஏற ஏற, வாசிப்ப வரும் தனது வேகத்தை ஏற்றி வரவேண்டும். ஒவ் வொரு நாளும் இப்படிப் பிறர் வாயிற் கேட்டு எழுதும் குறிப் பெழுத்துக் காரர் அன்றன்று எழுதிய குறிப்பு களில் எவை சுலபமாய் மனதிற்கோ, கைக்கோ வர வில்லையோ அவைகளைப் பின்னர் தனியே இருக்கையில் எழுதி அவைகளை எளிதாக்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சில நாள் எழுதியும், எழுதியவற்றைத் திருப்பி வாசித்தும் ஆன பிறகு இக் கல்வியின் பயன் நன்றாய் உணரப்படும்.

மேற் கூறியதை மனத்திற் கொண்டு, இந்நூலின் முதற் பாடத்திலிருந்து ஆரம்பித்து வெவ்வேறிடங்க ளில் எழுத்து வேலைக்காகவும் உதாரணங்களாகவும் கொடுக்கப் பட்டுள்ள சொற்களையும் வாக்கியங்களையும், ஒருவர் வாசித்துச் சொல்லுமாறு செய்து குறிப்புகள் எழுதுக.

வேலை

அதன் பின் கீழ்க் கொடுக்கப்பட் டிருக்கும் வாக்கியங்களுக்கும் அம் முறைப் படியே குறிப்புகள் எழுதுக.

செய்வன திருந்தச் செய்.

இனிமேல் நீங்கள் ஒருங்கு கூடி இக் கிராமம் முன்னடைவதற்கான காரியங்களைக் கவனியுங்கள்.

வியாபாரம் சரிவர நடந்து வருமாயின் கடன்காரரிடமிருந்து ஹிம்ஸை எதுவும் உண்டாகாது.

தஞ்சாவூரின் அருகிலுள்ள கரந்தை என்ற விடத்தில் தமிழ்ச் சங்கமொன்று நடந்து வருகிறது.

இங்கிலந்து தேச ஜனங்களை இங்கிலீஷ்காரர் அல்லது ஆங்கிலேயா என்று சொல்லுகிறோம்.

நன்றென்றும் தீதென்றும் நானென்றும் தானென்றும் அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே.

வெகு காலமாக பம்பாயின் ஒரு பகுதியா யிருந்த ஸிந்து என்னும் பிரதேசம் இனி ஓர் தனி மாகாணம் ஆகப் போகிறதாம்.

அதன் பின் நடந்த ஸம்பவங்களை, சேர்மன் நன்றாய் அறிந்திருந்தும், அவர் என், மீட்டிங்கில் ஒன்றும் கூறாதிருந்தார்?

கிம்சித் என்னும் ஸம்ஸ்கிருத பதமும் கொஞ்சம் என்னும் நமது தென் மொழிச் சொல் லும் ஒன்றே.

ஆறும் பாடம்.

ஆக்கு, பேச்சு, விட்ட, வைத்த, இருப்பு, ஏற்ற என்றவை போன்ற சொற்களி னமைப்பில் க், ச், ட், த், ப், ற் என்ற மெய்கள் இரட்டித் திருப்பது ஓர் முக்கியமான அமிசமாகின்றது. இம் மெய் யிரட்டிப்பு இப்பாடத்திற் கவனிக்கப்படும்.

சில விடங்களில், இரட்டித்த மெய்களை இரட்டி யாதவை போலவே பாவித்து முன்னைய பாடங்களிற் சொற் குறிப்புகள் எழுதினோமல்லவா? அவைகள் வல்லின மல்லாத மெய்களென அறியவும். பொதுவாக க். ச், ட். த், ப், ற் என்ற வல்லின மெய்கள் இரட்டிக் கையில் மாத்திரமே, குறிப்புகள் இப்பாடத்திற் கூறப் போகும் தனி முறைப்படி எழுதப் படவேண்டும். மற்ற மெய்களின் இரட்டித்தலை பெரும்பாலும் கரு தாது விடலாம். சொல்லின், கண்ணே, நமல், சொன்ன, பெய்ய, கொள்ளும் என்ற சொற்களின்

ல், ண், ம், ன், ய், ள் இரட்டித் திருப்பதைக் காண்கிறோம். ஆயினும் இவ் விரட்டிப்பு, சொல் முதலி லல்லாது உருபு சேர்க்கையில் ஏற்படுவதால் இதைக் கவனியாது விடுவோம். தவிர, வாக்கியங்களில் பின்னே வரும் சொல்லின் முதலோசை முன் சொல்லின் இறுதியில் இரட்டிக்கின்றது. அதைப் பார்த்து என்ற உதாரணத்தில் ப் இம்மாதிரி இரட்டிப்பதைக் காண்க. இவ் வகை இரட்டிப்பையும் நாம் குறிப்பெழுத்தில் கவனிக்க வேண்டியதில்லை.

வல்லின மெய்களிலும் ப் பினுடைய இரட்டிப்பு சில விடங்களில் குறிக்கப்பட வேண்டியதில்லை. ஏனெனின், சொற்களில் உயிரேறிய ப் அனேகமாய் இரட்டித்தே வருகின்றது. கலபை, நிரபு என்று குறிப்புகளிருப்பின், கலப்பை, நிரப்பு என எளிதாக வாசித்து விடலாம்.

வல்லின மல்லாத மெய்கள் இரட்டிக்கையில் சில விடங்களில் அவைகளி னிரட்டிப்பு காட்டப் படவேண்டும். மன்னி, செவ்வை, வல்லமை, பள்ளம் என்றவை இதற்கு உதாரணங்கள்.

———

மெய் யிரட்டிப்பைக் குறிக்கும் முறைகள் கீழ் வருமாறு.

ட்ட் த்த்

ட், த் என்ற மெய்கள் இரட்டிக்கையில் அவைகள் மேலேயுள்ள புதிய குறிகளால் காட்டப்படும். படுக்கை வசமாய் எழுதப்படும் ட் இனுடைய குறியாகிய வளைவு கோடு சற்று மேனோக்கி எழுதப்படின் அது ட் இனுடைய இரட்டித்தலைக் குறிக்கும். (ஷ் குறியை இங்கு ஞாபகத்திற் கொணர்க) ட்ட் குறியைப் போலவே மேனோக் கியதாய், அதற் கெதிர்ப்புறம் வளைவு கொண்ட கோடு த்த் ஐக் குறிக்கும். இவ் வளைவு கோடும் ஸ் குறியும் ஒன்றே. ஆகையால் இக் கோடு ஸ் அல்லது த்த் என்றதைக் குறிக்கும் எனக் கொள்க.

ட், த் என்னும் மெய்கள் இரட்டித்து ஆகிய சொற்களிற் சில கீழே குறிக்கப் பட்டிருக் கின்றன.



ஆட்டம் திட்டம் பட்டது வெட்டுப் இட்டபடி காட்டு பட்டு

அத்தனை ஒத்துழை பத்து நித்தியம் தேசத்துக்குதநில் யாமை

ட், த் நீங்கலாக மற்றைய மெய்களின் இரட்டிப்பு பின் வரும் முறைகளாற் குறிக்கப்படும்.

முதலில் ஓர் உயிரோசையையும் அதன் பின் இரட்டித்த மெய் யொன்றையும் கொண் டமைந்த சொற்களைக் குறிக்க; அம் மெய்யின் கோடு வேறோர் புதிய சிறு நேர் கோடால் வெட்டப்படும். உதாரணங்கள்:—



ஆக்க ஏற்றம் ஒப்பந்தம் இச்சை எண்ணெய் அம்மி

வெட்டுவதற் கென்றே சேர்த்துங் கொள்ளப்படும் தனிக்குறி வெவ்வேறு போக்காய் எழுதப் படுவதைக் கவனிக்க. தனியாய் அது எவ் வோசையையும் குறிப்ப தில்லை; அதனால் வெட்டப் படுகிற கோடு ஓர் இரட்டித்த மெய்யினது என்பதை மட்டும் அது குறிக்கும்.

முதலில் இத் தனிக் குறியை எழுதி, **அதன்** பிறகு சொல்லின் குறிகளை எழுதுவதே சரியான முறையாகும்.

விற்று, சிப்பி, நீக்கு, பிச்சை, கிண்ணம், விம்மு, வில்லை, பிள்ளை, சின்னம் என்ற சொற்களினமைப்பைப் பார்க்க. இரட்டித்த மெய்யின் முன் இ அல்லது ஈ என்ற உயிரோசையும் அதன் முன் வேறோர் மெய்யும் இருக்கின்றன. அம் மெய்யின் குறியைக் கொண்டே அதன் பின்னேவரும் இரட்டித்த மெய்யின் குறியை வெட்டுவோம். அதாவது, இத்தகைய சொற்களைக் குறிக்க, அதிகப் படியான வெட்டுக் குறி தேவையில்லை. கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க:—



விற்று சிப்பி நீக்கு பிச்சை கிண்ணம் விம்மு



வில்லை பிள்ளை சின்னம்

இச் சொற்களில் இரட்டித்த மெய்யின் முன்வரும் உயிரோசைக்குக் குறி கிடையாதென முன்னமே அறிவீர்கள்.

சக்கரம், பச்சை, நோக்க, காப்பார், நடப்பு, நாச்சியார், கற்று, சோற்று, தண்ணீர், பொம்மை, கல்லல், தள்ளி, மன்னி என்ற சொற்களில் இரட்டித்த மெய்யின் முன் நிற்கும் உயிர் ஓர் வட்டச் சுழியாற் குறிக்கப்படுவதாகும். இவ்வாறு ஆகுஞ் சொற்களின் இரட்டித்த மெய்யைக் குறிக்க, அதன் முன்னுள்ள வட்டச் சுழி பக்கம் மாற்றி எழுதப்படும். கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க:—



பச்சை நோக்கு காப்பார் நடப்பு கற்று சோற்று



தண்ணீர் பொம்மை கல்லல் தள்ளி மன்னி

———

முக்கியம், தேக்கம், புச்சி பேச்சு, கூப்பிடு, முற்றி, நேற்று, தும்மல், செம்மை, வெல்லம், முல்லை, செவ்வை, புள்ளி, வெள்ளி, சென்னை என்ற சொற்களில் இரட்டித்த மெய்யின் முன் நிற்பவை நீளச் சுழியாலும் கொக்கியாலும் குறிக்கப்படுகிற உயிரோசைகளாகும். ஓர் சொற் குறிப்பில் இடையேவரும்

நீளச் சுழி அல்லது கொக்கி அதன் முன்னுள்ள மெய்க் கோட்டுடனே யல்லவா பொது முறையால் சேர்த்து எழுதப்படும்? அவ்வுயிர்க் குறியைப் பின்னுள்ள கோட்டுடன் சேர்த்தெழுதினால் அப் பிந்திய கோடு இரட்டித்த மெய்யைக் குறிக்கும். கீழ் வரையப் பட்டுள்ள குறிப்புகளைப் பார்க்க:—



முக்கியம் தேக்கம் பூச்சி பேச்சு கூப்பிட்டு முற்ற



நேற்று தும்மல் செம்மை வெல்லம் முல்லை செவ்வை

புள்ளி வெள்ளி சென்னை

———

சில விடங்களில் இரட்டித்த மெய்யின் முன் உயிரோசை இல்லாது, அதற்குப் பதிலாக ய் அல்லது ர் அல்லது ழ் தோன்றி நிற்கிறது. வாய்க்க, தீர்ப்பு, வீழ்ச்சி என்ற சொற்கள் இதற்கு உதாரணம். இவை

போன்ற சில சொற்கள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

வாய்க்க தீர்ப்பு வீழ்ச்சி பாய்ச்ச பார்க்க



பயிற்சி வாழ்க்கை வாய்ப்பது

வேலை

கீழுள்ள சொற்களுக்குக் குறிப்புகள் வரைக :—

அக்காள், அச்சம், அண்ணன், அப்புறம், அப்பன், அம்மாள், அற்ற, அன்னை, ஆச்சரியம், ஆக்கிரம், இன்னது, உத்தேசம், உப்பு, உல்லாசம், உள்ளம், உன்னதம், ஊக்கம், ஊட்டு, எச்சரிக்கை, எல்லை, ஐக்கியம், ஐப்பசி, ஒற்றை, ஓட்டு, அழைப்பு, இரக்கம், எழுத்து. ஆதிக்கம், ஆதிபத்தியம், இரட்டை, அங்கத்தினர், எடுப்பது, அனைத்தும்,

கட்டளை, கத்தி, காக்க, காப்பாற்ற, காற்று, குறுக்கு. குறிப்பு, குத்தகை, கெட்டி, கொள்ளை, கோர்ட்டு, சச்சரவு, சத்துரு, சர்க்கார் சாட்டுதல், செவ்வாய், சோற்றுக்கு டெல்லி தக்கது, தப்பிதம், திருச்சி, திருட்டு, தீர்ப்பு, தொல்லை, தோட்டம், தோற்று, நண்ணுதல், நாட்டு நாற்றம், நித்தியம், நெற்றி நேத்திரம், நோக்கம், பண்ணிய, பல்லவி, பள்ளம், பாக்கியம், பாட்டன், பாய்ச்ச, பிள்ளை, பெற்றோர், போக்கு, போட்டி, போற்று, மக்கள், மத்தி, மன்னிப்பு மாட்டேன், மாற்று, மிச்சம், முட்டாள், முத்திரை, முற்றும், மூர்க்கன், மூர்ச்சை, மூத்தவன், மெல்ல, மொத்தம், யுத்தம், யோக்கியன், ரத்தம், ரொக்கம், வட்டி, வகுப்பு, வார்த்தை, வாக்கியம், வித்தியாசம், வீட்டுக்கு, வெண்ணெய், வெல்லம், வெள்ளை, வெற்றி, வெந்நீர், வைப்பது, வைத்தியர், கிட்ட, கூச்சல், கூட்டம், கெட்ட, கணக்கு, கருத்து, விசித்திரம், சிப்பாய், சில்லரை, சின்னவன், சுத்தம், சொத்து, சௌக்கியம், சரக்கு, சிறப்பு, திருத்தம், திண்ணம், துக்கம், தென்னை, நிமித்தம், நடத்தை, பள்ளிக்கூடம் பாக்கியம், புண்ணியம், போட்டு, பொல்லாத, பஞ்சாயத்து, பிரித்தல், விருத்தி, வருத்தப், விலக்கு.

தனிக் குறிச் சொற்கள்

கீழ் கொடுக்கப் பட்டுள்ள ஒடுங்கிய சொற் குறிப்புகளை, பல முறை பார்த் தெழுதியும் வாசித்தும் மனதிற் கொள்க.

	இத்தனை
	எத்தனை
	இட்ட, இட்டு
	விட்ட, விட்டு
	பட்ட, பட்டு
	நிச்சயம்
	அடுக்க
	சீக்கிரம்
	சற்று
	காட்டிலும்
	கெட்ட
	முக்கியம்
	மட்டும்
	மாத்திரம்
	முற்றிலும்
	மற்ற, மற்றும்
	பற்றி
	பொருட்டு
	பார்க்கிலும்
	சட்டாயம்
	வரைக்கும்
	கிடைக்கும்
	ஆகட்டும்
	நல்ல

ஐக்கியக் குறிப்புகள்

இதன் கீழ் சில ஐக்கியக் குறிப்புகள் காட்டப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சில முறை பார்த்தெழுதுக.



பூர்த்தி செய்ய
வைத்துக் [கொள்ள
பார்த்துவிட்டு
விட்டுவிட்டு
ஆனமட்டும்
இதைககாட்டி [லும்
கேட்ட பிரகு
மற்றப்படி
நல்லது ஆகட் [டும்



கொடுக்கவில்லை
எடுத்துக் [கொண்டு
சொன்னபடி
சற்றுநேரம்
முக்கிய [விஷயம்
சுற்றுப் பக்கம்
ஒன்று மாத்தி [ரம்
முடித்துவிட்டு

உருபு. விகுதிகள்

செய் என்ற சொல்லுடன் சில புதிய விகுதிகளைச் சேர்த்து, கீழே குறிப்புகள் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கற்றறிக.

செய்து விட்டு

செய்யா விட்டால்


செய்த மட்டும்


செய்பவற்றை


செய்ய மாட்டேன்

செய்யட்டும்


செய்யப்பட்டது

செயற்கை


செய்தாயிற்று

செய்யமாட்டார்

வேலை

அடியிற் காணும் சொற்களுக்குக் குறிப்புகள் வரைக:

பண்ணினீர்களா, நினைத்தபடி, சட்டென்று, செய்யாமற் போகட்டும், தள்ளிவிட்டு, சொல்லப்பட்டு, ஏற்றவாறு, முக்கிய காரியம், செலவிட்ட பிறகு, நடப்பித்தல், வரவழைக்கும்படி, செலவழிக்கட்டும், சொன்னது முதல், வைத்துக்கொள்ள, கொடுக்காவிட்டால், போக்கு வரவு, நிறைவேற்ற, தப்பாமல், தக்கபடி, கொடுத்து விட்டு, செய்யமாட்டாமை, கட்டாயப்படிப்பு, முயற்சியுடைய, வீட்டிலுள்ளவர்கள், பிழைப்பதற்காகவே, நிறுத்திக்கொள்ள, ஏற்படுத்தி விட்டார், செய்வதைக்காட்டிலும், ஆகக் கூடியவற்றை, எத்தனையோ, முற்றிற்று, சற்றுப் பொறுத்து.

வாக்கியங்கள்

வேலை

கீழுள்ள வாக்கியக் குறிப்புகளைப்பார்த்தெழுது:—

1.

2. 

3.

4. 

5. 

1. குறிப்பெழுத்து வித்தையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது.

2. எதிரி குற்றமற்றவன் என்று ஒப்புக்கொண்டு கோர்ட்டார் வழக்கைத் தள்ளிவிட்டார்கள்.

3. திருச்சி ஜங்ஷனிலிருந்து கோட்டை எத்தனை மைல் தூரத்திலிருக்கிறது?

4. சென்னை சட்ட சபையின் நடவடிக்கைகள் பத்திரிகைகள் யாவற்றிலும் பிரசுரிக்கப்படுகின்றன.

5. மிச்ச சரக்கை விற்று, கிடைத்த தொகை மொத்தத்தையும் கூட்டாளிகளுக்குப் பாகிப்பது என்று முடிவாயிற்று.

கீழ் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைக் குறிப்பெழுத்து முறையில், வாசிக்கக்கேட்டு எழுதுக:

அறத்திடு பிச்சை கூவி யிரப்போர் அரசோடிருந்து ஆளினுமாளுவர்.

நேற்றிராத்திரி நான் ஒரு வேடிக்கையான சொப்பனத்தைக் கண்டேன்.

தான் பெற்ற சிசுவை ஓர் வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பி அதைத் தண்ணீரில் அமுக்கி விடும்படி செய்ததாக செல்லம்மாள் என்றவள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

தன் முயற்சியினால் மட்டும் வெற்றியடையக் கூடுமானால் ஒரு வருஷத்துக்கு முன்னமே அவருக்கு அந்த ஸ்தானம் கிடைத்திருக்குமே.

பருத்தி, காப்பிக்கொட்டை, இவைகளை அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்கள் ரெயில்வே கட்டணங்களைக் குறைக்கவேண்டுமென்று நீடித்த காலமாக விண்ணப்பித்து வருகிறார்கள்.

அச் சன்னியாசி மற்றவர்களுக்கோர் வழி காட்டியாகத் தன் வாழ்க்கையை நடத்தியதுமன்றி, பல பழைய தத்துவ நூல்களின் கருத்தை தீர்க்கமாய் ஆராய்ச்சி செய்து, தான் கண்டறிந்தவற்றைப் புத்தக மூலமாய் நமக்கு விளக்கியிருக்கிறார்.

மாட்சிமை தங்கிய கவர்னரையும் நிர்வாக சபை அங்கத்தினரையும் நாங்கள் இன்று காலை எட்டு மணிக்கு பேட்டி கண்டு நமது குறைகளைத் தெரிவித்தோம். அவைகளைப்பற்றி அதிசீக்கிரம் ஆலோசித்து அடுத்த செவ்வாய்க்கிழமை கெஸட்டில் தங்கள் உத்தரவை

வெளிப்படுத்துவதாக அவர்கள் எமக்கு வாக்களித்தார்கள்.

மற்ற தேசத்தினர்களைப்போல் தாமும் யுத்தக் கப்பல்களை அதிகரிக்கவேண்டும் என்றும் அதற்காக அடுத்த வரவு செலவு திட்டத்தில் வேண்டிய அளவு பணத்தை ஒதுக்கி வைப்பதாக அரசாங்கத்தார் உறுதி கொடுக்க வேண்டுமென்றும் சர்ச்சில் பிரபு நேற்றைப் பிரிட்டிஷ் பார்லிமெண்டு கூட்டத்தில் வற்புறுத்தினர்.

———

ஏழாம் பாடம்.

முன்னைய ஆறு பாடங்களிற் கூறப்பட்ட போதனைகளைக்கொண்டு, எல்லா வகைச் சொற்களையும் குறிப்பெழுத்தில் அடக்கக்கூடும். ஒவ்வோர் ஓசைக்கும் ஓர் குறி கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஓசைகளைச் சேர்த்து வாயாற் சொற்களுரைப்பதற் கேற்ப ஓசைக்குறிகளை இணைத்து சொற்குறிப்புகள் எழுதும் வழியும் காட்டப்பட்டிருக்கிறது. தவிர, பலவிடங்களில் ஓர் குறியைக் கொண்டு ஒன்றுக்கதிகமான ஓசைகளைப் பதிவதற்கான முறைகளும் காட்டப்பட்டுள்ளன. உயிர்க்குறிகளைப் பக்கம் மாற்றி எழுதுவதும், ஐந்தாம், ஆறும் பாடங்களிற் சொல்லப்பட்ட குறிகளை உபயோகித்தலும் இம் முறைகளைச் சேர்ந்தவை. இன்னும், அனேக சந்தர்ப்பங்களில் உயிர்க்குறிகளும் மெய்க்குறிகளும் தள்ளப்படலா மென்றும் கூறியிருக்கிறோம். சாதாரண முறையில் ஓரளவு நேரத்தில் எழுதக்கூடிய சொற்களின் எண்ணைவிடப் பதின்மடங்கு அதிகமான சொற்களை அதே நேரத்தில் வாயால் உரைக்க இயலுமாதலாலும், சொல்லின் வேகத்தை எழுத்திலே கொணருங்கருத்துடன் இந் நூல் இயற்றப்பட்டிருப்பதாலும், ஓசைக் குறிகளோடு, மேலே சொல்லிய உபாயங்களையும் கற்

பித்துள்ளோம். இந்நோக்கம் பற்றியே ஐக்கியமாகுஞ் சொற்களின் குறிப்புகளைச் சேர்த்தெழுதுமாறும் போதித்துள்ளோம்.

மேலும், பல சாதாரணச் சொற்களை முழுதுங் குறிக்காது. அவைகளுக்கென ஒடுங்கிய தனிக்குறிப்பு கள் கற்பிக்கப்பட்டனவல்லவா? காதாற்கேட்கும் சொற் களொவ்வொன்றையும், முழுதுங் குறித்து எழுதுவ தென்றால் 'சொல்லொக்குங்கடிய வேக'த்தைக்காட்டக் கூடிய திறமை பெறுவது அரிதாகும். ஆகையால், சில சொற்களை மட்டும் முற்றவெழுதி ஏனையவற்றை அடக்கிக் குறித்தலையே ஓர் முக்கிய நோக்கமாக வைக்க வேண்டும். இவ்வாறு செய்ய முன்னே கூறியுள்ளவற் றைத் தவிர, வேறு சில உபாயங்கள் உள. அவைகள் கீழே விவரிக்கப்படுகின்றன.

அவர்கள் என்னுஞ் சொல் அடிக்கடி கூறப்படு கிறது. அதைக்குறிக்க வ் கோடுமட்டுமே போதும். **இருக்கிற** என்ற சொல்லை ஒடுக்காமற் குறிக்கின் இரண்டு ர் கோடுகளை இணைக்கவேண்டும், ர் கோடு ஒன் றோடு அ சுழியைச் சேர்த்து இச் சொல்லைக்குறித்தலே போதும். **செய்து** என்ற சொல் **சேய்** என்றே எழுதப் படலாம். **மூடி** என்ற சொல்லைக் குறிக்க, **ம்**, **ட்**,

களின் வளைவு கோடுகளினிடையே நீளச் சுழியை அமைக்கிறீர்களல்லவா ; அந்நீளச் சுழியைத் தள்ளி விட்டு இரண்டு வளைவு கோடுகளையும் சேர்த்தெழுத லாம். கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க.



இருக்கிற செட்டியார் செய்து முடியாத
பொழுது அவர்கள் விட்டு போனால்

திருக்காட்டுப்பள்ளி, விஜயராகவாசாரியார், தாமிரபரணி, என்றவை போன்ற தனிப்பெயர்கள் வெகு நீளமாயிருத்தலால் அவைகளைக் குறிக்கப் பல கோடுகள் தேவையாகின்றன, குறிப்பதும் சடுதியிலாவ தில்லை. சேலம், ராஜன், வைகை என்ற பெயர்களை எவ்வளவு சீக்கிரம் குறிக்கலாம்? பல சிறப்புப் பெயர் கள் நீண்டனவா யிருப்பதால், அவைகளின் முதற் பாதியைக் குறித்து, பிற் பாதியை எழுதா தொழிக்க. பொதுப் பெயர்களிலும் நீண்டனவற்றை இவ்வாறே ஒடுக்கிக் குறிக்க. ஸுபரிண்டெண்டெண்டு, ஸம் ரக்ஷணார்த்தம் என்றவை போன்ற சொற்களை முழுதுங் குறிப்பது அவசியமில்லை. தவிர, குறிப் பெழுத்தில் தனிப்பெயர்கள் தனியாகக் காட்டப்பட வேண்டும் ; அன்றேல் வாசிக்கும்பொழுது சிரமம் ஏற்படக்கூடும். அச்சொற்களுக்குக் குறிப்பெழுதிய

பின், குறிப்பின் கீழ் இரண்டு புள்ளிகள் வைக்கப்படுவது நலமாகும். கீழுள்ள உதாரணங்களைப் பார்க்க:



வைகையாறு தஞ்சாவூர் ஜில்லா சேலம் விஜய [ராகவாசாரியார்.

கனம் மந்திரி பி. டி. ராஜன் அவர்கள்.

உயிர்க்குறிகளைக் கொண்டு முடிகிற குறிப்புகள் சிலவற்றுடன் உருபுகளைச் சேர்த்தெழுதுவது இயலாதாகிறது. செய்தவர் என்றதன் குறிப்போடு ஆல் சேர்த்தெழுதப்படின் செய்தல் என்று வாசித்தற்கிடமேற்படும். அக்குறிப்புடன் ஐ, ஓடு என்ற உருபுகளையும் சேர்க்க முடிவதில்லை. இச் சந்தர்ப்பங்களில் உருபின்

குறி சொற்குறிப்பின் மேர்புறம் தனித்தெழுதப்பட வேண்டும். அடியிலுள்ள உதாரணங்களைப் பார்க்க:



செய்தவரால் வருவதோடு போவே நினைத்தவனை
னென்று

எனது, உன்னுடைய என்றவைகளின்-அது-உடைய சில விடங்களில் தள்ளப்படலாம். இரட்டித்த மெய்களை வெட்டியெழுதல் என்னும் தனிமுறை, சில விடங்களில் உபயோகிக்கப்பட வேண்டியதில்லை. முயற்சி, தளர்ச்சி, வைக்க, தீர்ப்பு, நினைப்பது, வரலாற்றை என்ற சொற்களின் முதல்களாகிய முயல் தளர், வை, தீர், நினை, வரலாறு என்றவைகளில் ஓசையிரட்டிப்பு கிடையாதலால் உருபேறிய பின்னும் இவைகளைக் குறிக்க வெட்டுதல் தேவையில்லை.

தவிர, ஓர் சொல்லின் ஆரம்பத்தில் இரட்டித்த மெய் இருப்பின் அதைக்காட்டுவதற்காக அதிகப்படியான குறியொன்று சேர்க்கப்படுகிறதல்லவா? வாக்கியத்தில் அச்சொல்லுக்கு முன் வேறுசொல் இருப்பின், முந்திய சொற்குறிப்பின் கடைசிக் கோட்டாலேயே பிந்திய சொல்லின் இரட்டித்த மெய் காட்டப்படலாம். உதாரணமாக:



செய்த அதிக அச்சம் ஆச்சரிய அதைஉற்றுப்
அக்கிரமம் கொண்டு உப்பை பார்த்து

மெய்க்கோடுகளைத் தவிர அலகுகளையும் வெட்டி, இரட்டித்த ம், ன் களைக் காட்டலாம். உதாரணங்கள்:

சின்னம் பின்னம் அம்மை சொன்ன கும்மி அன்னம்

ஆழ்ந்த, சாய்ந்து, தீர்ந்த, மகிழ்ந்து, தவிர்ந்த, புதைந்து என்ற சொற்களைக் குறிக்க ந் இன் கோட்டுக் குப்பதிலாக இன் ஐக் குறிக்கும் அலகு உபயோகிக்கப் பட்டு குறிப்புகள் கீழ்காட்டியுள்ளவாறு எழுதப்படலாம்.



ஆழ்ந்த சாய்ந்து தீர்ந்த மகிழ்ந்து தவிர்ந்த புதைந்து

சாய்ந்து, புதைந்து என்ற சொற்களின் குறிப்புகளில் ய் கோடு தள்ளப்பட்டு, அதன் முன்னுள்ள சுழியுடன் அலகு சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனிக்க. -யம் என்ற முடிவு அம் அலகாற் குறிக்கப்படலாம். உதாரணங்கள்:

நியாயம் அவசியம் ஆகாயம் நயம் பயம் நேயம்

ஆதாயம் அபிப்பிராயம் நிலயம் அசத்தியம் பாக்கியம் விவசாயம்

ஆதாரம், நகரம் என்றவை போன்ற சொற்களின் ர் ஐத் தள்ளிவிட்டு அதன் முன்னுள்ள சுழியைப் பக்கம் மாற்றிப்போட்டு அதனுடன் அலகு சேர்த்துக் குறிப்புகள் எழுதப்படலாம். உதாரணங்கள்:

ஆதாரம் ஆகாரம் நகரம் அவசரம் கூடாரம் அபாரம்



மரம் உயரம் வரம் சாளரம்

இவ்வாறு **அம்** அலகைக்கொண்டு முடியும் குறிப்புகளுடன் உருபு சேர்க்கையில், **-அம்** என்றது -அத்து என்று **மாறு**வதைக் காண்கிறோமல்லவா? ஆதாரம், **ஆதாயம்** என்ற சொற்களுடன் ஐ சேர்க்கையில் அவை

ஆதாரத்தை, ஆதாயத்தை, எனவாகின்றன. இம் மாறுதலைக்கருதாது **அம்** அலகைக்கொண்டே குறிப்பெழுதி அதன் இறுதியில் ஐ சேர்க்கவும். இப்போதனை கீழுள்ள குறிப்புகளால் விளங்கும்:

ஆதாரத்தை ஆகாயத்தில் நகரத்தின் பாக்கியத்தால் துயரத்தோடு

நிலம், பணம், நாமம், வேகம், நாசம், என்ற சொற்களின் **அம்** முன் ய் அல்லது ர் கிடையாதென்றும் இவைகள் உருபேறியிருப்பின் இவைகளைக் குறிக்க **த்த்** குறி உபயோகிக்கப்படவேண்டுமென்றும் அறிக.

அம் அலகு இரண்டு கோடுகளினிடையே **ஆர்** என்ற ஓசையையுங் குறிக்குமாறு எழுதப்படலாம். உதாரணங்கள்:

தாங்க வாஞ்சை தாண்டி சாந்தம் காம்பு சான்று

-உவேன், -உவோம்- என்ற விகுதியைச் சேர்க்கையில்

வ் தள்ளப்பட்டு, நீளச்சுழியம் எம் அலகும் உபயோகிக்கப்படலாம். கீழுள்ள உதாரணங்களைப்பார்க்க:

கொள்ளு வருவோம் சொல்லு பேசு எழுதுவேன்.
வேன் வேன் வோம்

இவ்வலகு, பின்னும் சில சொற்களுடன் விகுதியாகச் சேரும். உதாரணங்கள் கீழுள.

எண்ணினேன் போனார் சொன்னார் பேசி நம்பினேன்
னேன்

பெரிய, பெய்தல், பேர், பேதம், வெறுப்பு, வெயில், வெளி, வேகம், வேலை, வேர், வேதம், வேளை, என்ற சொற்களைக்குறிக்க, முதலில் ப் அல்லது வ் கோடும் அதையடுத்து ஓர் கொக்கியும் எழுதப்படுமல்லவா? இவ் வகைச் சொற்களின் ப், வ் தள்ளப்பட்டு அடுத்த எ, ஏ யின் கொக்கியை அதன் பின்னுள்ள கோட்டுடன் பக்கம் மாற்றிச் சேர்த்து எழுதுவது ஓர் உபாயமாகும். கீழுள்ள குறிப்புகளைப் பார்க்க:

பெரிய பெய்தல் பேர் பேதம் வெறுப்பு வெயில்

வெளி வேகம் வேலை வேர் வேதம் வேளை

குறிப்புகளினாரம்பத்தில் இவ்வாறே நீளச்சுழி பக்கம்மாறி எழுதப்படின் அதன் முன் ச் மறைந்திருப்பதாகக் கருதப்படும். உதாரணங்கள்:



சுலபம் சூரியன் சுருக்கம் ஜூலை சுதந்திரம் சூது

சுயாட்சி சுவை சுகம் சுபம்

குறிப்புகளினாரம்பத்தில் வட்டச் சுழிகள் பக்கம் மாறியிருப்பின், அவைகளின் முன் க் மறைந்திருப்பதாகக் கருதப்படும். உதாரணங்கள்:



கலகம் காலம் கரை காரணம் கதி காது



கை காய் களவு காளை கவர் காவல்

மேலுள்ள குறிப்புகளைக் கவனித்து, பக்கம் மாறிய உயிர்க்குறிகளுக்குப்பின் இருப்பவை நேர் கோடுகளென அறிக. வளைவு கோடுகளின் முன் சுழி, கொக்கிகளைப் பக்கம் மாற்றி எழுதுவது சுலபமாகாதாகையால், அச் சந்தர்ப்பங்களில் சொல்லின் முதல் மெய்யைக்குறித்தே எழுதுக.

எண் குறிப்பு

எண்கள் வரிவெழுத்தில் வெவ்வேறு முறையாற் குறிக்கப்படுகின்றன. தமிழ் முறையில் **க, உ** என்றும் அராபிக் முறையில் 1, 2 என்றும் குறிக்கப்படுகின்றன. அராபிக் முறை மற்ற முறைகளைக்காட்டிலும் அதிக சுலபமாகையால் அது உலகெங்கும் வழங்கி வருகிறது. இவ்வித்தைக்கு அம்முறையே போதுமாதலால் வேறு புதிய முறை ஒன்றும் யாம் கூறப்போவதில்லை. 70, 100, 548 என்றே எண்கள் குறிக்கப்படும். ஆயினும் முழு ஆயிரங்களைக் குறிக்க மூன்று சுழிகளைச் சேர்ப்பதற்குப்பதிலாக **ஆய்** என்ற ஓசைக் குறியைச் சேர்க்கலாம். அது போலவே லட்சத்தை **லட்** எனறு எழுதுவதால் ஐந்து சுழிகளைச்சேர்க்க தேவையில்லை. கோடிகளைக் குறிக்க எழு சுழிகளை எழுதாமல் **கோடி** என

வெழுதலாம். ரூபாய் என்ற சொல் ர் கோடாற் குறிக்கப்படும். பின் வரும் குறிப்புகளைப் பார்க்க.

5  ... 5,000 ரூபாய்

50 50,00,000

140 140,00,00,000 ரூபாய்

ஐந்தாம், ஆறுவது, எழில் எட்டுக்கு என்றவைகளைக்குறிக்க, எண்ணின் மேற்புறம் உருபு எழுதப்படும்.

வேலை

அடியிற்காணுஞ் சொற்களுக்குக் குறிப்புகள் வரைக:

இருக்கிறது, சேர்மனவர்கள், செய்துகொண்டு முடித்துவிட்டு, அம்பாசமுத்திரம், கல்யாண சுந்தர முதலியார், வந்தவரை, போகிறானு, இருந்ததோடு, அவர்களதெண்ணம், உங்களிச்சைப்படி, அதற்கப்புறம், மன்னிப்பு, தென்னை, கவிழ்ந்து, சார்ந்த, மைந்தன், ஆய்ந்தறிந்து, அதிசயம், அதிகாரம், அபாயம், சமயத்தில், ஆலயம், புண்ணியத்தை, விசாரத்தால், தாவரம், கூடாரத்தின், பாங்கு, பிராஞ்சு, மாண்ட, வாங்கி, எண்ணுவேன், தாங்குவோம், வாங்கினேன், பெருமை, வேலி, வேறு, வேதியர், பெய்கிற, வெளியே, வேகாத, பேபர், ஜுரம், ஜரி, சூதாட்டம் சுய நலம், சுயராஜ்ஜியம், சுகாதாரம், காலையில்,

கலவரம், கரகோஷம், காரியதரிசி, கதை, காதோடு, காயம், கையை, களிப்பு, காளை, கவிஞர், காவியம், ககனம், காகிதம், கபடம், கோபம், கொலை, கொதிப்பு, கொள், நூறுகோடி ரூபாய், ஆறரைலட்சம் ஜனங்கள் ஆயிரம் மைல்.

சில தொடர்ந்த வாக்கியங்கள் கீழே ஒடுங்கிய முறையில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சில முறை வாசித்தும் பார்த்தெழுதியும் பழகுக. விளக்கம் அடுத்த பக்கத்திற் காண்க.



முன் பக்கத்திலுள்ள குறிப்பின் விளக்கம்

உலகத்தில் மிகப் பெரியது என்று கருதப்படும் அணைக்கட்டுகளில் மேட்டூர் அணை ஒன்று. இது சேலம் ஜில்லாவில் காவேரி நதி இரண்டு மலைகளின் இடையே வந்து கொண்டு இருக்கையில் கட்டப்பட்டிருக்கிறது. இதன் உயரம் 176 அடி. இது முக்கியமாக தஞ்சை ஜில்லாவின் நீர்ப் பாசனத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. இவ்வணையின் இடையே $8\frac{1}{2}$ அடி உயரமுள்ள நான்கு இரும்புக்குழாய்கள் அமைந்திருக்கின்றன. இக் குழாய் களின் மூலமாக ஜலம் வெளிப்படுகையில் 15,000 குதிரை ஓட்டமுள்ள வேகம் உண்டாகிறது. இவ் வேகத்தை வீண் போக்காமல் பொது ஜன உபயோகத் திற்குக் கொண்டுவர வேண்டி மின்சாரமாக மாற்றி, அதைப் பல ஜில்லாக்களுக்கு அனுப்புவது என்று கவர்ன்மெண்டார் முடிவு செய்து இருக்கிறார்கள். அதிலும் காடாரம்ப நாடுகளின் ஜலக்கஷ்டத்தைச் சிறி தளவாவது நிவர்த்திக்கவேண்டி இதைச் செய்து வரு கிறார்கள்.

முடிவுரை

இந் நூல் இத்துடன் முடிவாகின்றது. இதைக் கற்ற நீங்கள், பின்னும் ஓர் முறை இதிலடங்கிய போதனைகளை வாசித்து அவைகளனைத்தையும் நன்றாய் உணர்ந்து மனதில் வைத்து, அதன் பின் பல்வகைச் சொற்களுக்குக் குறிப்புகள் எழுதிச் சிலநாட் பழகுக. அத்தகைய வேலைக்கு வேண்டிய சொற்கள் இந்நூலி லேயே உள்ளன. வேண்டுமாயின் சிறுவர்களின் பாட புத்தகங்களையும் சேர்த்துக்கொள்க. அடிக்கடி கேட்கிற சொற்களைப் பல வகையாய் வேற்றுமைப்படுத்தி, அவ் வேற்றுமை, குறிப்புகளிற் காணுமாறு எழுதிப்பழகுக. அடுத்தபடியாக புத்தகங்களிலுள்ள வாக்கியங்களை யெழுதும் வழக்கத்தைச் சில நாள் கைக்கொள்க அவ் வாறு செய்கையில்,சில தினங்களுக் கொருமுறையாவது இந்நூலிலுள்ள போதனைகளைத் திரும்ப வாசித்து, உங்களது குறிப்பெழுத்து இப்போதனைகளை யொட்டி யிருக்குமாறு காக்க. இதனால் குறிகள்யாவையும் மனப் பாடமாகிவிடும். அவைகளைச் சேர்த்தற்காகிய முறை களும் கைப்பழக்கத்தில் வந்துவிடும், பிறகு அவ்வப் போது வெளிவருகின்ற பத்திரிகைகளிற் காணும் வியாசங்களைக் குறிப்பெழுத்திற்பதியும் பழக்கத்தை மேற்கொள்க. அதன் பின்னரே வேகமாய் எழுதுந் திறமை நாடப்படவேண்டும். அதுவரையில் குறிப்பு

களைப் பிழையின்றியும் அழகாயும்எழுதுதற்கான பழக்கத்தையே கைக்கொள்ளவேண்டும். இவையிரண்டும் சித்தியாத வரையில் வேகமாயெழுதுவது பயனற்றதாகும்; இவை சித்தித்த பின் வேகம் நாளடைவிற்றானே வரும்.

இந்நூலிற் கற்பிக்கப்பட்ட குறிகள் இன்னவை என நன்றாயறிக. மெய்யோசைகள் கோடுகளாற் குறிக்கப்படுகின்றன. அக்கோடுகளிற் சிலநேரானவை, மற்றவை வளைவுகோடுகளாகும். கோடுகளில் மூன்றைத் தவிர, மற்றயாவும் ஓரளவுள்ளன. அளவில் வித்தியாசப்படுகிற மூன்று கோடுகள் ய் ர் வ் என்ற வோசைகளைக் குறிப்பனவாகும். மற்றக் கோடுகளைப்போல் அவை இரண்டு மடங்கு நீளமாயுள்ளன. இந் நீளக் கோடுகள் சில விடங்களில் எழுதப்படுவதில்லையென அறிவீர்கள். உயிரோசைகளில் அ, ஒ என்றவை சிறிய சுழியாலும், ஆ, ஓ என்றவை பெரிய சுழியாலும், உ, ஊ என்றவை வட்டமல்லாது நீளப் போக்காயுள்ள சுழியாலும், இ, ஈ என்றவை புள்ளியாலும், எ, ஏ என்றவை கொக்கியாலும் காட்டப்படுகின்றன. இவ் வடையாளங்களும், அம் முதலியவற்றைக்குறிக்கின்ற அலகுகளும் மெய்க்கோடுகளினளவிற் குறைந்துள்ளன என்பதை மறவாதீர்கள்.